# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 புரட்டாதி 17 திங்கட்கிழமை (03.10.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 311


# நாட்டின் பாதுகாப்புச் செலவினம் அடுத்த வருடம் ரூ. 7,000 கோடி!

## இந்த வருடத்தைப் பார்க்கிலும் மேலும் ரூ.1,300 கோடி அதிகம்

கொழும்பு,ஒக்ரோபர்3

**அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு 6 ஆயிரத்து 947 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இது இவ்வாண்டு பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட 5 ஆயிரத்து 630 கோடி ரூபாவை விடவும் ஆயிரத்து 317 கோடி ரூபா அதிகமாகும். அதாவது, அடுத்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவினம் 24 வீதம் அதிகரிக்கப்படுகின்றது.**

அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் ஒவ்வோர் அமைச்சுக்கும் ஒதுக்கீடு தொடர்பான உத்தேச மதிப்பீட்டு அறிக்கை நாளை நிதி அமைச்சர் கலாநிதி சரத்அமுனுகமவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது. அதிலேயே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

அடுத்த ஆண்டுக்கான உத்தேச மதிப்பீட்டு அறிக்கையின்படி அரசின் செலவினம் 56 ஆயிரத்து 800 கோடி ரூபாவாகும். இது இந்த ஆண்டின் அரச செலவினமான 43 ஆயிரத்து 800 கோடி ரூபாவுடன் ஒப்பிடும்போது 13 ஆயிரம் கோடி ரூபா (அதாவது சுமார் 30 வீதம்) அதிகமாகும்.

ஜனாதிபதிச் செயலகத்துக்கான நிர்வாகச் செலவு இவ்வருடத்தில் ரூபா 65 கோடி 70 லட்சத்திலிருந்தது. அது, அடுத்த ஆண்டு 107 கோடி 90 லட்சம் ரூபாவால் - அதாவது 42 கோடி 20 லட்சம் ரூபாவாக - அதிகரிக்கப்படுகின்றது.

உத்தேச மதிப்பீட்டு அறிக்கைப்படி கணக்காய்வாளர் திணைக்களம், லஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் எச்சரிக்கை!

கொழும்பு,ஒக்.3

ஆரம்பம் முதல் என்னுடன் இணைந்து செயற்படுபவர்களுக்கு சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும். நான் வென்ற பின் வந்து என்னுடன் ஒட்டிக்கொள்ளலாம் என்பது நடக்காத விடயம்.- என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமானுக்கும், ஸ்ரீ.ல.மு.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் சூசகமாக எச்சரிக்கை விடுத்துள்ளார் என நம்பகரமான செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆறுமுகன் தொண்டமானும், ரவூப் ஹக்கீமும் பிரதமரிடம் அவர்களுடைய கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். தாம் ஜனாதிபதியானால் அந்தக் கோரிக்கைகளைத் தாம்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஆதரவு யாருக்கு? இ.தொ.கா. புதனன்று முடிவு

கொழும்பு, ஒக்.3

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவையா அல்லது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையா ஆதரிப்பது என்பதை இ.தொ.கா. நாளைமறுதினம் (புதன்கிழமை) உத்தியோகபூர்வமாக அறிவிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆதரவு யாருக்கு என்பதில் திட்டவட்டமான முடிவு எடுக்காமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருந்தது இ.தொ.கா.

அதனால் அக்கட்சியின் ஆதரவு தேவையே இல்லை என்ற சாரப்பட - முகத்தில் அடித்த

(16ஆம் பக்கம் பார்க்க)

**ஞாயிறு உதயனுடன் வெளிவரும் வர்ண விளம்பர அனுபந்தம் தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைய உதயனுடன் இணைக்கப்பட்டுள்ளது.**

## மேல் கொத்மலைத் திட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது தாக்குதல்!

### தலவாக்கலையில் குண்டர் குழு நேற்றுக் கைவரிசை

தலவாக்கலை, ஒக்.3

மேல்கொத்மலை நீர் மின் உற்பத்தித் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து தலவாக்கலையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை சில விஷமிகள் இனவாதப் போராட்டமாகத் திசை திருப்பிவிட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய குண்டர்கள் ஊடகவியலாளர்கள் ஒருவரையும் தாக்கி அவருடைய புகைப்படக் கருவியையும் சேதப்படுத்தினர். இதனால் தலவாக்கலையில் பதற்றம் நிலவியது.

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தினர் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை ஆதரித்தும், இந்த ஆர்ப்பாட்டத்தில் தாங்களும் தங்களது அமைப்பினரும் கலந்துகொள்வர் எனத் தெரிவித்தும் ஊடகங்கள் மூலம் முன்னதாகப் பெரும் அறிக்கைகளை பல அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் விடுத்திருந்த போதும் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் அரசியல்வாதிகளோ, பிரமுகர்களோ அல்லது அவர்களது அமைப்புகளைச் சேர்ந்தவர்களோ கலந்துகொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவின் அலுவலகத்திலிருந்து வந்தோரே தாக்குதல் நடத்தினர்!

### கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான இயக்கம் தெரிவிப்பு!

கொழும்பு,ஒக்.3

''பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் காரியாலயத்திலிருந்து வந்தோரே ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.''

-இவ்வாறு 'மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம்' அறிவித்திருக்கிறது.

நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து இயக்கத்தின் அமைப்பாளர் இ.தம்பையாவும், செயற்குழு உறுப்பினர் சரத் குமார பொன்னாண்டோவும் ஒப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மேல்கொத்மலைத் திட்டத்தை முற்றாக கைவிடும்படி வற்புறுத்தி மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் தலவாக்கலையில் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. ஆர்ப்பாட்டம் அரை மணித்தியாலங்

(16ஆம் பக்கம் பார்க்க)

## மாத நடுப்பகுதியில் திருமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு

திருகோணமலை, செப்.3

ஜூலை மாத இறுதியில் வவுனியாவில் நடந்த தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வில் வெளியிடப்பட்ட உரிமைப் பிரகடனத்துக்கு ஆதரவாகவும் -

விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகளுக்குப் விஜயங்கள் மேற்கொள்வதற்கு தடைவிதித்த ஐரோப்பிய ஒன்றியத்தின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் -

இந்த மாத நடுப்பகுதியில் திருகோணமலையிலும் எழுச்சி நிகழ்வு ஒன்றை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இது குறித்து மாவட்டத்தின் அரசியல்வாதிகளும் சமூகத் தலைவர்களும் நேற்றுக்கூடி ஆராய்ந்தனர். இது தொடர்பான ஏற்பாடுகளுக்காக குழுக்களும் நியமிக்கப்பட்டன.

எதிர்வரும் 15ஆம் திகதி அல்லது 22ஆம் திகதி நிகழ்வை நடத்துவதற்குத் திட்டமிடப்படுகின்றது. நிகழ்வை எப்போது நடத்துவது என்ற இறுதி முடிவை எதிர்வரும் 9ஆம் திகதி கூடும் ஏற்பாட்டுக் குழு தீர்மானிக்கும்.

திருகோணமலை விக்னேஸ்வரா மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று காலை 10.30 மணியளவில் கூடிய அரசியல்வாதிகளும்

(16ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் 4 தமிழர்கள் கைது!

திருகோணமலை, ஒக்.3

திருகோணமலை துறைமுகப் பகுதியை வீடியோப் படம் பிடித்தார்கள் என்ற சந்தேகத்தின்பேரில் நான்கு தமிழ் இளைஞர்களை திருகோணமலை துறைமுகப் பகுதியைச் சேர்ந்த கடற்படையினர் கைதுசெய்திருக்கின்றனர்.

நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட இந்த நான்கு தமிழ் இளைஞர்களும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நால்வரையும் கடற்படையினர் மேலதிக விசாரணைக்காக திருகோணமலைத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் குறித்து 80 பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு!

### தயாராகின்றது ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, ஒக்.3

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான - ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துடன் தொடர்புடைய - 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விவகாரம் குறித்து லஞ்ச ஊழல் மோசடிகள் ஒழிப்பு ஆணைக்குழுவிடம் மீண்டும் ஒரு முறைப்பாட்டை செய்யவிருக்கின்றது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி.

இந்தத் தடவை ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க இந்த முறைப்பாட்டு மனுவை இன்று சமர்ப்பிப்பார் எனத் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட எட்டு மாவட்டங்களிலும் உள்ள எண்பது பொலீஸ் நிலையங்களில் அவ்வப் பிரதேச மக்கள் நேரடியாகச் சென்று பிரதமருக்கு எதிரான முறைப்பாடுகளைச் செய்யவுள்ளனர் என ஐ.தே.கட்சி தெரிவித்தது.

தமக்கு எதிராக 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' ஊழல் விசாரணை நடைபெறுவதை ஆட்சேபித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்திருந்தார் என்பதும்-

அதனை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ள உயர்நீதிமன்றம் மேற்படி ஊழல் விவகாரம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பொலீஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொள்ளத் தடை விதித்து இடைக்

(16ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

# டாங்கிகளைத் தகர்த்த மாவீரர்களின் 12 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு

தென்மராட்சி,ஒக்.3

யாழ்தேவி இராணுவ நடவடிக்கை எதிர்ச் சமரின்போது இரண்டு இராணுவ டாங்கி களைத் தகர்த்து வீரச்சாவடைந்தவர்களான 82 மாவீரர்களின் 12ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை பளை அல்லிப்பளையில் டாங்கிகள் தகர்க் கப்பட்ட இடத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற் றது.

மாவீரர் கப்டன் தனா, எல்லைப்படை மாவீரர் சாந்தன் ஆகியோரின் சகோதரரும் பளை வணிகர் மன்றத் தலைவருமான அமீர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் பொதுச்சுடரினை பளைக் கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை துணைச்செயலா ளர் மன்னனும் தேசியக் கொடியினை பளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அ.கரிகாலனும் மாவீரர் பொதுப் படத்திற் கான ஈகச்சுடரினை மாவீரர் யாழரசியின் தாயாரும் நினைவுத் தூபிக்கான ஈகச்சுட ரினை மாவீரர் வேல்ராஜின் சகோதரனும் ஏற்றிவைத்தனர்.

நினைவுரைகளை தென்மராட்சி அரசியல் துறைப்பொறுப்பாளர் இரத்தினம், யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப் பாளர் கண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர்.

(ஒ-117)

## தடகளப் போட்டியில் யாழ். மாணவனுக்கு வெள்ளிப்பதக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

தேசிய மட்டத் தட களப் போட்டியில் நேற்று 17 வயது ஆண்கள் பிரிவில் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் தியாகராசா தர்ஷன் 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் 15.12 வினாடிகளில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

(190)

## பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். மாவட்டத்தில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றை உயர்துவதற் கெனத் தெரிவுசெய்யப்பட்ட 15 பாடசாலை களுக்குமான பயிற்சிப் பரீட்சைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான வினாத்தாள்களைக் குறிப் பிட்ட பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலை வர் பெரியதம்பி திலகவதி கேட்டுள்ளார்.

(எ-202)

## மின்சாரம் தாக்கிய தொழிலாளி இரு கைகளையும் இழந்தார்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

மின்சாரம் தாக்கிக் கட்டடத் தொழிலாளி ஒருவர் முழங்கைப் பகுதிக்குக் கீழ் இரு கைகளையும் இழந்தார்.

கிளிநொச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பரந்தன் குமர புரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி முருகானந்தம் (வயது-52) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே பாதிக்கப்பட்டவராவார்.

மாடிக் கட்டடத்தின் மேற்றளம் இடும் பணிக்காக இரும்புக் கம்பிகளை இவர் கீழே இருந்து மேலே இழுத்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு கம்பி அருகேயிருந்த அதிக வலுக்கொண்ட மின் கம்பிகளில் உராய்ந்தது. அதனால், அவர் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானார்.

படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டார். அவரது இருக் கைகளும் முழங்கைக்குக் கீழ் பாதிக்கப்பட்டு செயலிழந்திருந்ததால் சத்திரசிகிச்சையின் போது அவை அகற்றப்பட்டன.

(ஒ-15)

## ஸ்தாபகர் தின நிகழ்வு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பரி சளிப்பு விழாவும் ஸ்தாபகர் தின நிகழ்வும் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி திறந்தவெளி அரங்கில் நடைபெற வுள்ளன.

கல்லூரி அதிபர் திருமதி அ.வேலுப் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் மக்கள் வங்கியின் யாழ். பிராந்திய முகாமையாளர் து.ரகு, மனித மேம் பாட்டுப் பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் திருமதி பத்மலோஜினி ரகு ஆகியோர் பிர தம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

ஸ்தாபகர் தினப் பேருரையை யாழ். பல் கலைக்கழக கல்வியியற் பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்துவார்.

(எ-119-20)

## இன்று சூரிய கிரகணம்

கொழும்பு,ஒக்.3

சூரிய கிரகணம் இன்று நிகழ்கிறது. இன்று மாலை 5 மணியளவில் பூரண சூரிய கிரகணத்தை இலங்கை மக்கள் பார்க்க முடி யும். சூரிய கிரகணத்தின் ஆரைப் பகுதி யையே இலங்கை மக்கள் பார்க்கமுடியும்.

இது மாலை 5 மணி முதல் 6.30 மணி வரை நிகழும் என இலங்கைக் கோள் மண் டலம் அறிவித்துள்ளது.

இந்த சூரிய கிரகணத்தின்போது சூரிய னின் 48 வீதமான பகுதி மறைக்கப்படும். இதனை நேரடியாகப் பார்த்தால் கண்க ளுக்குப் பாதிப்பு ஏற்படும் என விஞ்ஞா னிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக உருவாக்கப்பட்ட விசேட கண்ணாடியில் இதனைப் பார்க்க முடியும்

இதேவேளை, சூரிய கிரகணத்தை ஆராய் வதற்கான ஆய்வுமுகாம் ஒன்று இன்று மாலை 5 மணி முதல் காலி முகத்திடலில் நடைபெறவுள்ளதாக இலங்கை கோள் மண்டலம் விடுத்துள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளது.

(8-190)

## குமுதினிப் படகின் கூடாரம் மழையின் முன் திருத்தப்படுமா?

### தீவகப் பயணிகள் கேள்வி

நல்லூர்,ஒக்.3

தீவகக் கடற் போக்குவரத்திற்குப் பயன் படும் குமுதினிப் படகின் கூடாரப் பகுதியை மழை காலத்தின் முன்னர் திருத்தியமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரி வரு கின்றனர்.

மழைபெய்யும்போது குமுதினிப் பட கில் பயணிப்பவர்கள் கூடாரத்தின் கீழ் இருப் பினும் குடைபிடித்தபடியே பயணிக்கநேரிடு கிறது. இதனால் கூடாரத்தைத் திருத்தியமைக்க வேண்டும் என நீண்டகாலமாகவே பொது மக்கள் கோரிவருகின்றனர். மாதாந்தம் உதவி அரச அதிபரினால் நடத்தப்படும் ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டங்களில் வீதி அபி விருத்தி அதிகார சபை அதிகாரிகளிடம் இக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆறு மாதங்களுக்கு மேலாக இது தொடர்பாக பேசப்பட்டு வந்போதும் படகின் கூடாரத் தைத் திருத்தியமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

குமுதினிப் படகின் முன் அறையின் இருக் கைகள் பல முற்றாக உடைந்து பயணிகள் இருந்து செல்லமுடியாதவாறு உள்ளன. ஒரு மாதத்திற்கு மேலாக இந்த நிலை உள்ளது. ஆயினும் இருக்கைகளைத் திருத்தியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இதனால் தீவக மக்கள் கடும் விசனமடைந்து வருகின்றனர்.

(ஒ-111)

## தமிழர் ஆசிரியர் சங்கம் புதனன்று சுகவீன விடுமுறைப் போராட்டம்

மண்டைதீவு,ஒக்.3

கல்வி அமைச்சிடம் முன்வைத்த இருபத் தைந்து அம்சக் கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாமையால் தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிப்பதற்கு தமிழர் ஆசிரி யர் சங்கம் தீர்மானித்துள்ளது.

திருகோணமலையில் நடந்த சங்கத்தின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் ஏகமனதாக எடுக்கப்பட்டது.

இதற்கான அடையாளப் போராட்டமாக எதிர்வரும் 5ஆம் திகதி புதன்கிழமை சர்வ தேச ஆசிரியர் தினத்தன்று சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடுமாறு உறுப்பினர் களுக்கு தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. ஏனைய ஆசிரிய சங்கங்க ளின் ஒத்துழைப்பையும் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-88)

## வீதி விபத்தில் சிறுவன் காயம்!

யாழ்ப்பாணம்,ஒக்.3

ஆனைக்கோட்டைப் பகுதியில் நேற்று வாகனம் மோதியதில் சிறுவன் ஒருவன் படு காயமடைந்தான்.

பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் அதேயிடத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் பிரணவன்(வயது 6) என்ற சிறுவனே படுகாயமடைந்தவனாவான்.

படுகாயமடைந்த இச்சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டான்.

(ஒ-12-ரி)

## சமாதானமும் அபிவிருத்தியும் தொடர்பாக பிரதேச செயலர் பிரிவு ரீதியாகக் கருத்தரங்கு

வலி.தெற்கு,ஒக்.3

யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் கொழும்பு மனிதநேய அமைப்புகளின் கூட்டமைப்பு டன் இணைந்து சமாதானமும் அபிவிருத்திக் குமான செயற்றிட்டங்களின் கீழ் பிரதேச செய லக ரீதியாக கருத்தரங்குகளை நடத்தி வரு கின்றது.

இதனடிப்படையில் சண்டிலிப்பாய் பிர தேச செயலர் பிரிவில் கட்டுடை, பண்டத் தரிப்பு சமூக அபிவிருத்தி சேமிப்புக் கழகங் கள் இணைந்து கடந்த வியாழக்கிழமை கட்டுடை சைவ வித்தியாசாலையில் இப்பிர தேசத்துக்கான கருத்தரங்கினை ஒழுங்கு செய்து நடத்தின.

கட்டுடை சமூக அபிவிருத்திக் கழகத் தலை வர் சி.பொ.வ.மா.க. முதலியார் தலைமை யில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய யாழ். சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி என்.ஜெகதீசன் தமது உரையில் இத் திட்டத்தின் கீழ் 15 பிரதேசங்களில் கருத்தரங்கு களை நடத்தவுள்ளது.

சமாதானம் ஏற்பட்டால்தான் எந்தவித அபி விருத்தியையும் முன்னெடுக்க முடியும். அடி மட்ட நிலையில் இருந்து, அதாவது வீட்டில் இருந்தே சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப் படவேண்டும். சமாதான முயற்சிகளில் பெண் களின் பங்களிப்பே முக்கியமானது என்று கூறினார்.

சமாதானமும் அபிவிருத்தியும் பற்றி கட்டுடை சைவத் தமிழ் வித்தியாலய அதிபர் கடவுள் சுப்பிரமணியமும் உரையாற்றினார்.

சமாதானத்தையும் அபிவிருத்தியையும் வலியுறுத்தி கட்டுடை சைவத் தமிழ் வித்தியா லய மாணவர்கள் பங்கேற்ற நாடகம் ஒன்றும் விழாவில் இடம்பெற்றது.

(எ-152)

## வவுனியா மாநாட்டுக்கு செயலணி அமைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

வவுனியாவில் எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள எழுச்சி மாநாட்டை ஒழுங்கு படுத்தி செயற்படுத்துவதற்காக செயலணிக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று 11 மணியளவில் புளியங்குளம் மகாவித்தியாலயத்தில் நாடாளுமன்ற உறுப்பி னர்களாகிய சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், வினோ நோதராதலிங்கம் ஆகியோர் தலை மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வெகு ஜன அமைப்புகளின் பிரதிநதிகள், பொதுமக் கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் செயலணிக் குழுவின் தலைவராக எஸ்.எம்.பி.நாதன், செயலாளராக ஜே.பி.கிறிஸ்தோப்பர் ஆகியோர் உட்பட 21 பேர் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டுள் ளது.

தமிழர்களின் அபிலாஷைகளைப் பிரதி பலிக்கவுள்ள இம்மாநாட்டினை சிறப்பாக நடத்துவது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது.

(9-ரி)

## நுண்கலைத்துறை மாணவர்கள் இன்று முதல் சாத்வீகப் போர்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண் கலைத்துறையில் 2004 ஆம் ஆண்டு நான் காம் வருடத்தைப் பூர்த்திசெய்த மாணவர்கள் இன்று முதல் சாத்வீகப் போராட்டத்தில் ஈடு படப்போகின்றனர் என்று அறிவித்துள்ளனர்.

இறுதி வருடப் பரீட்சைப் பெறுபேற்றில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டதாகவும் -

அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் கோரியே இப்போராட்டம் நடத் தப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ள னர்.

இவ்விடயம் தொடர்பாக யாழ். பல் கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதா ஸிடம் நேற்றுமுன் தினம் கடிதம் ஒன்றை அவர்கள் கையளித் துள்ளனர்.

அக்கடிதத்தில் தெரி விக்கப்பட்டிருப்ப தாவது:-

மாணவப் பிரதி நிதிகள் எமது பிரச் சினைகளை முழுமையாக ஏற்று அதற்குரிய தீர்வினைப் பெறும் நோக்குடன் இதுவரை காலமும் அவர்களால் எடுக்கப்பட்ட நட வடிக்கைகள் பயனளிக்கவில்லை என்பதனைத் தெளிவாக அறியத்தத்திருக்கின்றார்கள். இவ் வாறான இழுத்தடிப்பிற்கும் பிரச்சினைக்கான தீர்வின்மைக்குமான முழுப்பொறுப்பும் எமது கலைப்பீடாதிபதியையும் துணைவேந்தரா கிய உங்களையுமே சாரும் இவ்வேளையில் பட்டமளிப்பு விழா நெருங்கிக் கொண்டு இருப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கு கால அவகாசம் போதாது என்று கூறு வது ஏற்றுக்கொள்ளமுடியாததொரு விடய மாகும்.

இதன் விளைவாக எமக்குரிய தீர்வினைப் பெறும் நோக்கில் மாணவர்களாகிய நாம் 03.10.2005 முதல் சாத்வீகப் போராட்டம் ஆரம்பிக்கவுள்ளோம் என்பதனை தெரிவித் துக்கொள்கின்றோம். இதன் மூலம் சரியான தும் நியாயமானதுமான தீர்வு உடன் கிடைக் கப்பெறாதவிடத்து பல்கலைக்கழக நிர்வாக செயற்பாடுகளைப் பாதிக்கும் வகையில் எமது போராட்டம் விரிவடைந்து செல்லும் என்ப தனை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம். - என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-12)

## சூழல் தினத்தை முன்னிட்டு கரவெட்டியில் கலந்துரையாடல்

கரவெட்டி,ஒக்.3

உலக சூழல் பாதுகாப்பு தினத்தை முன் னிட்டு கிராம மட்டத்தில் கிராம மக்களின் பங்களிப்புடன் கழிவுப் பொருள்களை அகற் றும் வேலைத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக கலந்துரையாடல் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கரவெட்டிப் பிர தேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கிராம அபி விருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபி விருத்திச் சங்கங்கள், கமக்கார அமைப்புகள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழ கங்கள் என்பனவற்றின் பிரதிநிதிகளும், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பாட சாலை அதிபர்கள், கமநலத் திணைக்களங்கள், சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்கள், வீதி அபிவிருத்தித் திணைக்கள உத்தியோ கத்தர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ள வுள்ளனர் என பிரதேச செயலர் சி.சத்திய சீலன் தெரிவித்தார்.

(எ-70-204)



உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அந்நிய சக்திகளின் வருகையின் ஐந்து நூற்றாண்டுகளின் முடிவில்......!

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை இந்த நவம்பர் மாதம் மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. இலங்கை ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நவம்பர் மத்தியில் நடைபெறுவதால் மட்டும் அல்ல, அதற்கு அப்பாலும் ஒரு காரணம் இதற்கு உண்டு.

இலங்கைத் தீவின் வரலாற்றைக் கண்ணோட்டம் செய்பவர்கள் இத்தீவில் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இரண்டு வெவ்வேறு இனங்களின் கலாசார வடிவங்கள் தனித்தனியாக - ஆழமாக - வேரோடியிருப்பதைக் காண்பர்.

தனித்தனித் தாயகப் பிரதேசங்களோடு, தனித்தனியான மொழி,கலாசாரம்,வாழ்க்கைமுறை சகிதம், தனியான இராச்சியங்களை நிறுவி , காலங்காலமாக - தலைமுறை தலைமுறைகளாக - வெவ்வேறாக வாழ்ந்து வந்த சிங்கள, தமிழ் இன விருட்சங்களின் ஆழமான வேர்களை இலங்கைத்தீவு கொண்டுள்ளது.

ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் போர்த்துக்கீசர் இந்தத் தீவில் காலடி எடுத்து வைத்தபோது இருந்த நிலைமை அதுதான்.

1505ஆம் ஆண்டு நவம்பர் மாத மத்தியில் (15ஆம் திகதிக்கும் 18 ஆம் திகதிக்கும் இடையில்) போர்த்துக்கீசர் இலங்கையில் முதன் முதலாகக் காலடி எடுத்து வைத்துத் தமது பிரசன்னத்தை நிலைநிறுத்தி இந்த நவம்பரோடு சரியாக ஐந்நூறு ஆண்டுகள் - ஐந்து நூற்றாண்டுகள் - பூர்த்தியாகப் போகின்றன. இந்த நிலையில் தான் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் - நாட்டின் அதி உச்ச அதிகாரப் பதவிக்கான தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான - வாக்களிப்பு நடைபெறப்போகின்றது.

அந்நிய வல்லாதிக்க நாடுகள் - மேற்குலக அதிகார வர்க்கம் - இலங்கையைக் கைப்பற்றி, இத்தீவை அடிமைப்படுத்தி, தமது ஆளுகைக்குட்படுத்திய பிற்காலத்தில்தான், இரண்டு தனித்தனி இராச்சியங்களின்கீழ் தத்தமது இறையாண்மையைக் கொண்டு வெவ்வேறாக வசித்து வந்த தமிழர்களும், சிங்களவர்களும் ஆக்கிர மிப்பாளர்களால் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டார்கள்; சிங்களமும், தமிழர் தாயகமும் அந்நிய ஆக்கிரமிப்பு ஆட்சியாளர்களின் நிர்வாக வசதிக்காக ஒன்றிணைக்கப்பட்டன.

அந்த வரலாற்றுப் பலவந்தத்தின் பெறுபேறுகளையே துன்பியல் நிகழ்வுகளாக கடந்த ஐந்து தசாப்த காலமாக இலங்கைத் தீவு எதிர்கொண்டிருக்கிறது.

இந்த வரலாற்று நெருக்கடிக்குக் கால்கோள் இட்ட அந்நிய ஆதிக்க வருகையின் ஐந்து நூற்றாண்டு நிறைவிலாவது, அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைக்குக் கால்கோள் இடப்படுமா என்பதுதான் இந்தத் துன்பியல் நிகழ்வுகளில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழ் இனத்தின் ஆதங்கமும் எதிர்பார்ப்புமாகும்.

அந்நிய ஆதிக்க சக்திகளின் வருகையை ஒட்டிய ஐந்நூறாவது ஆண்டு நிறைவின்போது இலங்கைத்தீவில் நடைபெறப்போகின்ற - அதிகாரக் கதிரைக்கான இழுபறித் தேர்தல் இந்த நெருக்கடிக்குத் தீர்வுகிட்ட வழி காட்டுமா என்பதுதான் கேள்வி.

இலங்கையின் தற்போதைய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இரண்டே இரண்டு வழிகள்தான் உள்ளன என்பது தமிழர் தரப்பின் கணிப்பு.


ஒன்று - தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவுசெய்யும் வகையில் தமிழர் தேசத்துக்கு அதிகாரங்களைப் பகிர்வது மற்றும் தமிழர்களின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிப்பது.

மற்றது - அதற்கு சிங்கள தேசம் இணங்காவிட்டால் தமிழர் தேசம் தனக்குரிய நாட்டைத் தானே உருவாக்கிக் கொள்வது.

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தென்னிலங்கையில் அரசியல் சக்திகள் ஒன்றிணைவதை - அணிதிரள்வதை - பார்த்தால், அவைகூட தெரிந்தோ, தெரியாமலோ இந்த இரட்டைத்தீர்வின் அடிப்படையில் தங்களுக்குள் கன்னை பிரித்துக் கொள்வதாகவே படுகின்றது; அமைதித் தீர்வா அல்லது ஆயுத வழித் தீர்வா காண்பது என்பதைத் தீர்மானிக்க தென்னிலங்கை தயாராவதாகவே புலப்படுகிறது.

இலங்கைத் தீவின் மக்கள் தமக்கு வேண்டியது போரா அல்லது சமாதானமா என்பதை தமது வாக்குகள் மூலம் தீர்மானிப்பதற்கு மீண்டும் அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் இத்தேர்தல் மூலம் வழங்கப்படுவதாகவே கூற வேண்டும். தென்னிலங்கை மக்கள் இதில் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள் என்பது இன்னும் ஒன்றரை மாதத்தில் தெளிவாகிவிடும்.

தென்னிலங்கை மக்களின் - குறிப்பாக தென்மாகாண மக்களின் - வாக்களிப்புப் போக்கு, இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிங்களத்தின் நிலைப்பாடு எதிர்காலத்தில் எப்படி இருக்கப்போகின்றது. அதன் மனவோட்டம் என்ன என்பன போன்ற விடயங்களைப் பிரதிபலிப்பதாக அமையும் என எதிர்பார்க்கலாம்.



நல்லொழுக்க தின நிகழ்வில் வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.இராஜேந்திரம், போரூட் நிறுவன யாழ். மாவட்ட அதிகாரி எஸ்.கோகுலதாசன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் நிற்பதை முதலிரு படங்களிலும் மாணவர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்; சி.சுந்தரலிங்கம் கரவெட்டிச் செய்தியாளர்)

## வடமராட்சியில் சிறப்புற நடைபெற்ற நல்லொழுக்க தினக் கண்காட்சி

கரவெட்டி,ஒக்.3

நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு வடமராட்சி கல்வி வலயமும் போரூட் அமைப்பின் ஒளி நிறுவனமும் இணைந்து நடத்திய விழிப்புணர்வு கண்காட்சியும் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

பாடசாலை மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கண்காட்சியைப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் சம்பிராதாயபூர்வமாக நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

வித்தியாலய கலாசார மண்டபத்தில் தொடர்ந்து நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் கருத்துரைகளை பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன், போரூட் நிறுவன யாழ்.மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் எஸ். கோகுலதாசன், வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.இராஜேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வடமராட்சி வலய பாடசாலை மாணவரிடையே நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர்.

(எ-70-204)

## பேரவை உறுப்பினர்களாக மேலும் மூவருக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களாக மேலும் மூவர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடமாநில முன்னாள் கல்விப் பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம், டாக்டர் எஸ். சிவானந்தராசா, எஸ்.எக்ஸ்.குலநாயகம் ஆகியோரே புதிதாக நியமிக்கப்பட்டுள்ளவர்களாவர். (எ-3)

## தென்மராட்சி வலய மாணவருக்கு வழங்கும் சத்துணவு மா பழுதடைந்த நிலையில்!

### சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.3

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் சத்துணவு மா பழுதடைந்து புழுக்களும், வண்டுகளுமாகக் காணப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயமாக, சம்பந்தப்பட்ட பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு காலை வேளைகளில் சத்துணவு மா வழங்கப்படுவது வழக்கம்.

அவ்வாறு வழங்குவதற்கு பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ள மாவில் வண்டுகளும் சிறுபுழுக்களும் காணப்படுகின்றன. இதனால் மாணவர்கள் குறிப்பிட்ட சத்துணவு மாவை பெறுவதில் பின்னிற்கின்றனர்.

அண்மையில் மட்டுவில் பகுதியில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கென வழங்கிய சத்துணவு மாவில் வண்டுகளும், புழுக்களும் இருந்ததையும் மா பழுதடைந்து இருந்ததையும் அங்கு திடீர் விஜயம் செய்த சுகாதாரப் பரிசோதகர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

இதேவேளை- மாணவர்களின் உணவுக்காகப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட அரிசி வகைகளும் பழுதடைந்த நிலையிலேயே உள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது. (எ-3-31-203)

## அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இருவருக்கு ரூ. ஒரு லட்சம் அபராதம்

தென்மராட்சி,ஒக்.3

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்ற இருபார ஊர்திகளின் சாரதிகளுக்கு ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நீதிமன்றில் கடந்த 28 ஆம் திகதி விசாரிக்கப்பட்ட இரு வழக்குகளுக்கு இவ் அபராதம் விதிக்கப்பட்டது.

சந்தேகத்திற்கிடமான முறையில் வந்த பார ஊர்தியை நிறுத்துமாறு பொலீஸார் சமிக்ஞை செய்தபோதும் பாரஊர்தியை சாரதி நிறுத்தாமல் சென்றதால் பொலீஸார் வாகனத்தில் துரத்திச் சென்று பிடித்தனர்.

பார ஊர்தியின் சாரதியான மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வடிவேலு வீரதாஸன் என்பவரைப் பொலீஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்செய்தனர்.

அனுமதிப்பத்திரமின்றி வாகனத்தில் மணல் ஏற்றிச்சென்றமை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகனவரி, காப்புறுதி ஆகியவை இன்மை, பொலீஸாரின் சமிக்ஞையை உதாசீனம் செய்தமை ஆகிய குற்றங்கள் இந்நபர் மீது சுமத்தப்பட்டது.

இந்நபர், ஏற்கனவே இந்நீதிமன்றில் இருதடவைகள் இதேபோன்ற குற்றங்களுக்காக அபராதம் செலுத்தியவர் எனப் பொலீஸார் சுட்டிக்காட்டியதையடுத்து நீதிவான் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய குற்றத்திற்கு 75 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரம், வாகன வரி, காப்புறுதி ஆகியவை இல்லாத குற்றங்களுக்காக தலா 2ஆயிரம் ரூபா வீதமும் பொலீஸாரின் சமிக்ஞையை உதாசீனம் செய்த குற்றத்திற்காக 4 ஆயி ரம் ரூபாவுமாக மொத்தம் 85 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரமின்றி இனிமேல் வாகனம் செலுத்தமாட்டேன் எனவும், மணல் கடத்தலில், தோண்டுதலில் ஈடுபடமாட்டேன் எனவும் உறுதிமொழி பெறப்படல் வேண்டுமென உத்தரவிட்டார்.

அனுமதிப்பத்திரமின்றி பார ஊர்தியில் மணல் ஏற்றிய மற்றொரு சாரதி நீதிமன்றில் ஆஜர்செய்யப்பட்டார்.

இவ்வழக்கினை விசாரித்த நீதிவான் பார ஊர்தியின் சாரதி மணல் ஏற்றிய குற்றத்திற்கு 50 ஆயிரம் ரூபாவும், சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வாகனவரி ஆகியவை இல்லாத குற்றங்களுக்குத் தலா ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதித்தார்.

அத்துடன், 17 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வலுவுடை ப ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

(3-117)

## குறண்டிப்பிட்டியில் பொதுமண்டபம்

வரணி,ஒக்.3

வரணி வடக்கு கிராம உத்தியோத்தர் பிரிவில் குறண்டிப்பிட்டி பிரதேசத்தில் பொது நோக்கு மண்டபம் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, மேற்படி திட்டத்தின் கீழ் ஒன்றரை கிலோமீற்றர் தூரம் வரையான தார் வீதியும் அங்கு அமைக்கப்படவுள்ளது. இவ்வேலையை ஸ்ரீகணேசா சன சமூக நிலையத்தினர் செயற்படுத்த உள்ளனர். (ஒ-170)

## நாளை

*புரட்டாதி 18*
*செவ்வாய்க்கிழமை*
*04.10.2005*
**திதி:** *பிரதமை*
*பிற்பகல் 05.03வரை*
*நவராத்திரி விரதம் ஆரம்பம்*
**நட்சத்திரம்: அத்தம்**
**காலை 6.25 வரை**
**சுபநேரம்:** *10.32 - 12.02*
**ராகுகாலம்:** *03.02 - 04.32*
***(யாவும் ப ய நேரப்படி)***

## நாவற்குழியில் அற்புத அன்னையின் ஆலயம் நிர்மாணிப்பு

நாவற்குழி அற்புத அன்னை ஆலயம் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

சாவகச்சேரி பங்குத் தந்தை வண.ம. இரவிச்சந்திரன் அடிகளார் தலைமையில் மேற்படி நிர்மாணப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆலயத்திற்கு அடிக்கல் கடந்த 15 ஆம் திகதி நடப்பட்டது. (எ-31)

## சொற்பொழிவாளர் நூலகத்துக்கு உதவி

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த மகோற்சவ கால சொற்பொழிவில் தொடர் சொற்பொழிவாற்றிய சிவத்தமிழ் சொல்லழகர் ச.லவீசன் தமக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ரூ 10 ஆயிரத்தை குறித்த ஆலயத்தின் அருகில் இயங்கும் ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலையின் நூலக அபிவிருத்திக்கென வழங்கியுள்ளார். (எ-72)

## சுகாதார ஊழியருக்கு அ.அட்டை

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கணனி அடையாள அட்டை வழங்கப்படவுள்ளது. கணனி அடையாள அட்டை வழங்குவதற்கு வர்ணப் புகைப்படம் அனுப்பிவைக்குமாறு பிராந்திய சுகாதார பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை சகல நிறுவனத் தலைவர்களையும் கேட்டுள்ளார். (ஒ-117)

## உதயவாக்கு

**சந்தோஷத்தையும் துக்கத்தையும் சமனாக நினைத்துவிட்டால் வாழ்க்கையில் எல்லாமே சந்தோஷம் தான். *—ஓர் அறிஞர்.***

## வில்லூன்றி மயானத்தில் நிழல்தரு மரங்கள்

வில்லூன்றி இந்து மயானத்தின் எல்லைகளில் நிழல்தரு மரங்களை நாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கடந்த 28ஆம் திகதி மயானத்தைப் பார்வையிட்ட யாழ். மாநகரசபை செயலாளர் திருமதி ம.வசந்தகுமார் தெரிவித்துள்ளார்.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் சகிதம் அங்கு சென்றமாநகர சபைச் செயலாளர் மேற்படி இந்து மயானத்தின் குறை நிறைகளைக் கேட்டறிந்தார். தற்சமயம் இடம்பெற்றுவரும் மயானத்திற்கான சிரமதானப் பணிகளில் நாவாந்துறை அண்ணா சனசமூக நிலைய உறுப்பினர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (3-111)


யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

### வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் - 08-10-2005

மேற்படி கூட்டம் 08.10.2005 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு.சு.சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது. கூட்ட அறிவித்தலும் பொதுச்சபைக் கூட்டப் பிரதிநிதிக்கான அதிகாரக் கடிதமும் கூட்ட நிகழ்ச்சி நிரலும் வரவு செலவுத் திட்டம் 2006, கணக்கறிக்கை யாவும் தொடர்புள்ள அங்கத்துவ சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது எம்முடன் தொடர்பு இல்லாத அங்கத்துவ சங்கங்கள் இவற்றைச் சமாச காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இல.637,கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.

பதில் மாவட்டச் செயலாளர்,
யாழ்.மாவட்ட சி.க.கூ.
சங்கங்களின் சமாசம்.

(சி-45381) (26-19-45)

3-1ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
தங்கம்மா
வைரமுத்து

மலர்வு
27-03-1918

உதிர்வு
02-09-2005

கண்கள் பனிக்கிறதே காலனுமை கவர்ந்ததனால்
எங்கள் குலவிளக்கே எமைவிட்டு ஏனகன்றீர்!
திங்களொன்று கழிந்தாலும் தீரவில்லை எம்துயரம்
தங்கமே உம்மைத் தரணியிலே யாம்மறவோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்தித்துக்கொள்ளுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(40356) (24-18-16)

முள்ளாவத்தை,
அல்வாய் தெற்கு, அல்வாய். - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி நாகலிங்கம்

புங்குடுதீவு, 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவரும் பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையில் வசித்தவரும் தற்பொழுது பிரான்சில் வசித்தவருமான சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்கள் 01-10-2005 சனிக்கிழமை பிரான்சில் சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி- இளையபிள்ளை தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு- சின்னம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துப்பிள்ளை (தங்கம்), சௌந்தரிப்பிள்ளை, பொன்னையா (S.P.N.) மற்றும் பொன் ணம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நாகேஸ் வரி (பிரான்ஸ்), நாகராசா (கனடா), தெட்சணாமூர்த்தி (காண்டீபன்- வர்த்தகர் சுன்னாகம்), புனிதவதி (கனடா), மங்களேஸ்வரி (சுவிஸ்), மனோகரன் (பிரான்ஸ்), ரதீஸ்வரி (கனடா), மாவீரரான மனோரஞ்சன் (மனோ) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சரவணமுத்து (பிரான்ஸ்), வரலெட்சுமி (கனடா), தவரஞ்சிதமலர் (யாழ்ப் பாணம்), துரைராசா (கனடா), திருநாவுக்கரசு (கண்டி), வசந்தகுமாரி (பிரான்ஸ்), ஜீவரட்ணம் (கனடா) ஆகியோரின் மாமனா ரும் நமுனன், கிசோர், சர்வேஸ், குணாலினி, எமிலி, ஜெயதீபன், தினேஸ்குமார், சதீஸ்குமார், மோகனராஜி (யாழ். இந்துமகளிர் கல்லூரி), சபேசன் (யாழ்.மத்திய கல்லூரி), கஜன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), தர்ஷிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), டிலக் ஷன் (யாழ்.இந்துக் கல்லூரி), தர்மிகா, ஜேனிகா, பிரதீபன், மயூரகி, வினோஜிகா, நிரோஜா, ஷகிலா, பார்த்தீபன், சுபா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற பார்வதி மற்றும் கனக சுந்தரம் (நீர் கொழும்பு), கண்ணம்மா (கொழும்பு), நாகம்மா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

283/13, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
நா.தெட்சணாமூர்த்தி
(மகன்).

(46123)(26-19-45)

### தேவை

பிரபல புத்தக விற்பனை நிறுவனத்திற்கு புத்தகம் ஸ்ரேசனற் விற்பனையாளர் தேவை, முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேரில் தொடர்பு கொள்ளவும்.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212.கே.கே.எஸ்.வீதி
யாழ்ப்பாணம்.

(சி/45385) (26-19-45)

### தேவை

கணனி அறிவுடைய,
கணக்கியல் அனுபவம் உள்ள
பெண்கள் தேவை.

தொடர்பு:-
ஐடியல் கிறீம் ஹவுஸ்,
இல.458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.(பழைய OPT முன்பாக)

(சி/45385)(26-45-19)

### உடன்தேவை

அலுவலக உதவியாளர் (Peon)
திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில்
நேரில் வரவும்

SAAMSTECH

89, Hospital Rd.
Jaffna.
021-4591571

233/4,
Kasthuriyar Rd.
Jaffna.
077-9575889

(40642)(26-19-45)

### யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்

**1) நெசவாளர் தேவை**

எமது சங்கத்திற்கு நெசவாளர்களும் நெசவு பயிலுநர்களும் தேவைப்படுகின்றனர். திறைமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.

**2) கட்டடங்கள் வாடகைக்கு**

கோண்டாவில், இருபாலை வீதியில் வாகனங்கள் நிறுத்தக்கூடிய சகல வசதிகளுடனும் கூடிய காரியாலயம், களஞ்சியத் தேவைகளுக்குப் பாவிக்கக் கூடிய 1600 சதுர அடி, 1800 சதுர அடி, 2000 சதுர அடி கொண்ட கட்டடங்கள் வாடகைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலை வீதி, கோண்டாவில்.

(40568) (26-19-45)

### ACS

விசேட பிரிவுகள் ஆரம்பம்

Diploma in MS Office
Diploma in Desktop Puplishing
Diploma in internet Techonology
Diploma in Hardware Engineering
A/L மாணவர்களுக்கான
GIT (General Information Technology)

| | | |
|---|---|---|
| Batch I | 28.09.2005 | 10 a.m. |
| Batch II | 05.10.2005 | 9 a.m. |
| Batch III | 08.10.2005 | 4 p.m. |

KOPAY JUNCTION, KOPAY.

### ஒத்துமாறல்

வடமராட்சி வலயப் பாடசாலை ஒன்றில் திட்டமிடல் / நிதி உதவியாளர் நியமனம் பெற்ற பட்டதாரி ஒருவர் வலிகாமம் அல்லது யாழ். வலயத்திற்கு நிதி/திட்டமிடல் பதவிக்கு நியமனம் பெற்ற ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

தொடர்புகளுக்கு 0777 111583
அல்லது 467 /1,கே.கே.எஸ்.வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(40720) (19-26-45)

### தவறிவிட்டது

எமது நிறுவனத்தைச் சேர்ந்த டாட்டா லொறியின் பின் இலக்கத்தகடு (NPGQ 8659) தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:
நுரோவில்
இல.866, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(40707)(26-19-45)

### மத்திய கிழக்கு நாடுகளில் உடனடி வேலைவாய்ப்பு

குவைத், துபாய், சவுதிஅரேபியா ஆகியநாடுகளில்
பின்வரும் தொழில் வாய்ப்பு

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் | (SECURITY GUARD) |
| விமான நிலைய பொதி சுமப்பவர் | (PORTER) |
| விமான நிலைய சுத்திகரிப்பு | (CLEANING WORK) |
| கட்டிட தொழிலாளர்கள் | (LABOURER) |
| ஷட்டரிங் வேலை அனுபவம்கொண்ட தச்சுத் தொழிலாளர்கள் | (SHUTTERING CARPENTER) |
| மேசன்மார் | (MASON) |
| மாபிள் கல் பதிக்கும் அனுபவம் வாய்ந்த மேசன்மார் | (MARBLE/TILES MASON) |
| மின் இணைப்பாளர்கள் | (ELECTRICIAN) |
| உருக்கு பொருத்துநர்கள் | (STEEL FIXER) |
| பிளம்பர்மார் | (PLUMBERS) |
| சுவர் வர்ணம்தீட்டுவோர் | (WALL PAINTER) |

தொடர்புகளுக்கு:

RAIN BOW TRAVELS &TOURS

32 1/2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
ராஜா கிறீம் கவுசுக்கு அருகாமையில் Tel: 0777,328219,021,2223237

### தாதிப் பயிற்சி முடித்தோருக்கு U.K.இல் வேலைவாய்ப்பு

U.K.இல் உள்ள பிரபல்யமான Nursing Home இற்கு அரச சான்றிதழ் பெற்ற தாதிப் பயிற்சி முடித்தவர்களுக்கு வேலை உத்தரவாதச் சான்றிதழுடன் வேலைவாய்ப்பு.

மேலதிக தொடர்பிற்கு: T.P.:0776180082
gajan@hot mail.com
k_thushanthan@gmail.Com

V. அண்ணாமலை
"ஐங்கரன் இல்லம்"
சூராவத்தை, சுன்னாகம்.

(40362) (39-21-11-45)

### மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01
-
10
-
1937



விண்ணில்
03
-
10
-
2002

திருமதி பரமேஸ்வரி பார்வதிநாதசிவம்

அன்பொளியில் மகிழ்வித்தே
அன்று பிரிந்தீர்கள்
துன்பிருளில் நின்றே
துடிக்கின்றோம் இந்நாளில்....

சம்பியன் லேன்,
கொக்குவில்.

(40708) (26-19-45)

- குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்வநாயகம் அகஸ்டின்



புலோலி, வடமராட்சியைப் பிறப்பிடமாகவும் இல.25, றிச்வே பிளேஸ் கொழும்பு - 4ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் அகஸ்டின் 30.09.2005 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

இவர் ஐறீனின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற திரு.திருமதி P.F. செல்வநாயகத்தின் மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிராசாவின் மருமகனும் ஐறின் (லண்டன்), றோஸ் (ஜேர்மனி), நவமணி (கனடா), காலஞ்சென்ற அன்ரன் மற்றும் ஜசிந்தா (நல்லாயன் மடம் கொட்டாஞ்சேனை), அருட்சகோதரி தெரேசா O.C.D. (கலிஸ்ரா- Great Carmel Convent, Galle), அஞ்சலா (லண்டன்), Dr. ஜோசவ் (லண்டன்), நிர்மலா (லண்டன்), மங்களா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரான்சிஸ், டானியர், சந்திரன், பீற்றர், Dr.ஜீவனி, குகராஜ், அமலதாசன், றூபி (கனடா), காலஞ்சென்ற பசில் மற்றும் ஜேம்ஸன் (கனடா), ஜஸ்டின் (சார்ஜா), அருட்தந்தை T.J.கிருபாகரன் (அதிபர்- புனித மாட்டீனார் குருமடம், யாழ்ப்பாணம்), லூக் (கனடா), ஜேன் (ஹொலண்ட்), லலி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.10.2005) திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு A.F.Rayamond மலர்ச்சாலையில் இருந்து நல்லடக்கத்திற்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

சென்மாட்டீன் செமினறி,
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: ஐறீன் (மனைவி),
அருட்தந்தை
T.J.கிருபாகரன் (மைத்துனர்).

(40648)(26-1-45

# பாலித்தீவு உல்லாச பயணிகள் விடுதியில் தற்கொலை குண்டுதாக்குதல்; 26பேர்பலி!

பாலி (இந்தோனேஷியா),ஒக்.3

இந்தோனேஷியாவில் பாலித் தீவிலுள்ள மூன்று பயணிகள் விடுதிகளில் நடத்தப்பட்டுள்ள தற்கொலை குண்டுத் தாக்குதல்களில் குறைந்தது 26 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களின் உடல்கள் உல்லாசப்பயணிகள் பகுதியான ஜிம்பரான் மற்றும் குட்டா ஆகிய இடங்களில் கிடந்ததாக பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைச் செயலகத்தைச்



சேர்ந்த அதிகாரி மேஜர் ஜெனரல் அன்சியாட் எம்பேய் கூறினார்.

ஜமாஹ் இஸ்மியா என்ற பிராந்திய தீவிரவாதக் குழுவே இத்தாக்குதலை நடத்தியிருக்கவேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

2002ஆம் ஆண்டு பாலித்தீவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளுக்கும் இந்தக் குழுவே காரணம் என்று கருதப்பட்டது.

தாக்குதல் நடத்திய மூவரில் இருவர் ஜிம்பானிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதிக்குள் கடந்த சனிக்கிழமை மாலை குண்டுகள் தாங்கிய உள் ஆடைகளுடன் நுழைந்துள்ளனர். மூன்றாமவர் குட்டா பகுதியில் விடுதி ஒன்றுக்குள் நுழைந்துள்ளார். உள்ளே சென்றதன் பின்னர் குண்டுகளை வெடிக்கச் செய்துள்ளனர் என்று ஜெனரல் எம்பேய் கூறியுள்ளார்.

''நான் அவர்களைப் பார்த்தேன். அவர்களின் தலைகளும் கால்களும் மட்டுமே எஞ்சியிருந்தன'' என்று அவர் கூறினார்.

மலேஷியாவைச் சேர்ந்த இரண்டு தலைமைமறைவு நபர்கள் இந்தத் தற்கொலைத் தாக்குதல்களுக்குத் திட்டமிட்டு உதவியுள்ளார்கள் என்று சந்தேகிக்கப்படுவதாகவும்-

இந்தோனேஷியாவில் மிகவும் தீவிரமாகத் தேடப்படும் நபர்கள் பட்டியலிலுள்ள அஸஹாரி பின் ஹிஸின் மற்றும் நூர்தீன் மொகம்மதுடொப் ஆகிய இவர்கள் வெகுகாலமாக இந்தோனேஷியாவில் தேடப்பட்டு வருபவர்கள்.

எந்தவொரு தீவரவாதக் குழுவும் சம்பவத்துக்கு இன்னமும் உரிமை கோரவில்லை.

பெரும்பாலும் இந்துக்களே அதிகமாக வாழ்கின்ற பாலித்தீவு மேற்கத்திய உல்லாசப் பயணிகளைக் கவரும் இடமாக இருந்து வருகின்றது. இஸ்லாமிய அல்கெய்டா தீவிரவாத இயக்கத் தாக்குதல்களுக்கு வசதியான இடமாகவும் இருக்கின்றது என்று பி.பி.ஸி. செய்தியாளர் கூறுகின்றார்.

மூன்று தாக்குதல்களும் ஏககாலத்தில் உள்ளூர் நேரம் இரவு எட்டுமணிக்கு முன்னதாக இடம்பெற்றன என்று பொலீஸார் தெரிவித்தனர்.




ஜிம்ஹிரானில் இரண்டு வெளிக்கள உல்லாசப் பயணிகள் விடுதிகளும் 100 மீற்றர் இடைவெளிதூரத்தில் அமைந்திருந்தன. இந்தச்சம்பவத்தின் முழுதாக்கமும் இந்தோனேஷியாவின் மீதே விழுகின்றது என்றாலும் பாதிக்கப்பட்டவர்களில் ஆஸ்திரேலியர், அமெரிக்கர், ஜப்பானியர் மற்றும் கொரிய நாட்டவர்களும் உள்ளனர்.

''சம்பந்தப்பட்டவர்களை வேட்டையாடிப் பிடித்து நீதியின் முன் நிறுத்துவோம்'' என்று அதிகாரிகள் கூறினார்கள்.

2002ஆம் ஆண்டு ஒக்ரோபரில் 88ஆஸ்திரேலியர் உட்பட 202பேர் கொல்லப்பட்ட சம்பவத்தின் நினைவுதினத்திற்கு இரண்டுவாரம் இருக்கும் நிலையில் இப்புதிய தாக்குதல் இடம்பெற்றுள்ளது. (ஐ-ப)

## ரஷ்ய ஆயுதக் கிடங்கில் தீ! 7 ஆயிரம் பேர் வெளியேற்றம்

மொஸ்கோ,ஒக்.3

ரஷ்யாவில் பீரங்கிக் குண்டுகள் சேமித்து வைத்திருக்கும் கிடங்கில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து பீரங்கி மற்றும் வெடிமருந்துக் கிடங்குகளில் வேலை செய்வோர் உட்பட ஏழாயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதுகாப்பான இடத்திற்கு வெளியேற்றப்பட்டனர்.

ரஷ்யாவில் கிழக்கு கோடியில் பசுபிக் கடற்பகுதியில் உள்ள தீபகற்ப பகுதியான காம்சாட்காவில் ரஷ்யாவிற்கு சொந்தமான பீரங்கிக்குண்டுகள் சேமித்து வைக்கும் கிடங்கு உள்ளது. இங்கு நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென தீ பிடித்தது. இதனால் குண்டுகள் வெடித்துச் சிதறி வானுயரத்திற்கு நெருப்பை உமிழ்ந் தன. சில வினாடிகளுக்கு ஒருமுறை பீரங்கிக் குண்டுகள் வெடித்துச் சிதறின. இது தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பப்பட்டது. (ஐ)

## ஐ.நா.பாதுகாப்பு சபை விஸ்தரிப்பு விரைவுபடுத்த இந்தியா உறுதி!

நியூயோர்க்,ஒக்.3

ஐக்கிய நாடுகள் (ஐ.நா.) பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தும் பணியை விரைவுபடுத்த இந்தியா உறுதி பூண்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையில் கோபி அனான் அறிக்கை மீது வியாழக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய ஐ.நாவுக்கான இந்தியத் தூதர் நிருபம் சென் இதைத் தெரிவித்தார்.

அவர் கூறியதாவது:-

15 உறுப்பினர்கள் கொண்ட பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர்கள் பிரிவிலும், நிரந்தரமற்ற உறுப்பினர்கள் பிரிவிலும் கூடுதலான நாடுகளைச் சேர்த்து சபையை விரிவுபடுத்த வேண்டும்.

இப்பணியை விரைவாக முடிக்க இதர உறுப்பு நாடுகளுடன் இணைந்து இந்தியா பாடுபடும். இவ்விடயத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்கி இந்தியா தனது பணியை நிறைவேற்றும்.

வளரும் நாடுகளை வளர்ந்த நாடுகள் ஒரங்கட்டுகின்றன. இதனை முறியடிக்க வளரும் நாடுகளுக்கு அதிகாரமளிக்கப்பட வேண்டும். அந்நாடுகளுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும்.

அண்மையில் நடைபெற்று முடிந்த உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் வர்த்தகம் மற்றும் மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படாதது ஏமாற்றம் அளிப்பதாக உள்ளது. சண்டைக்குபோகத்துடிக்கும் நாடுகளின் கூட்டமைப்பு நமக்குத் தேவையில்லை. ஏழை நாடுகளுக்கு உதவப் புதிய கூட்டமைப்பு தொடங்கப்பட வேண்டும் - என்றார். (ஐ)

உலக அரங்கில்

## அமெரிக்கக் கம்பனிகளின் அலுவலக பணிகள் இந்தியாவில் நடக்கின்றன

நியூயோர்க்,ஒக்.3

அமெரிக்காவில் சிலிகான் பள்ளத்தாக்கில் உள்ள பெரும்பாலான கம்பனிகள், தங்களது அலுவலக வேலைகளை இந்தியாவுக்கு அனுப்பிச்செய்து கொள்வதாகத் தெரியவந்துள்ளது.

சந்தா கிளாரா பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இத்தகவல் தெரியவந்துள்ளது.

சிலிகான் பள்ளத்தாக்கில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட கம்பனிகளில் 53சதவீத கம்பனிகள், தாங்கள் அலுவலகப்பணிகளை வெளிநாடுகளிடம் ஒப்படைப்பதாகத் தெரிவித்தனர்.

அவற்றில் கிட்டதட்ட 50 சதவீதப்பணிகள் இந்தியாவுக்குக் கிடைப்பதாகத் தெரியவந்துள்ளது. இந்தியாவில் படித்தவர்களும், ஆங்கிலத்தில் சரளமாகப் பேசுபவர்களும் நிறைந்திருப்பதால், இந்தியாவுக்கு இத்தகைய வாய்ப்புக் கிடைப்பதாக சந்தா கிளாரா பல்கலைக்கழக பொருளாதாரப் பேராசிரியர் மரியோ பெலோட்டி தெரிவித்தார். (ஐ)

## போர் நினைவுச்சின்னத்தை பிரதமர் பார்வையிட்டது தவறு!

### ஜப்பானிய நீதிமன்றம் தீர்ப்பு

டோக்கியோ,ஒக்.3

சர்ச்சைக்குரிய போர் நினைவுச் சின்னத்தை ஜப்பான் பிரதமர் கொய்சுமி பார்வையிட்டது சட்டவிரோதம் என்று ஒசாகா உயர்நீதிமன்றம் வெள்ளிக்கிழமை கூறியது.

தைவான் நாடு, ஜப்பானின் காலனி ஆதிக்கத்தில் இருந்தது. அப்போது, தைவான் நாட்டினரை வலுக்கட்டாயமாக இராணுவத்தில் சேர்த்து போரில் ஈடுபடுத்தியது ஜப்பான்.

போரில் இறந்த வீரர்களின் நினைவாக யாசுகுனி என்ற இடத்தில் நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஜப்பான் பிரதமர் கொய்சுமி நினைவுச் சின்னத்தைப் பார்வையிட்டார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போரில் இறந்த தைவான் நாட்டு வீரர்களின் உறவினர்கள் ஒசாகா உயர்நீதிமன்தீறத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

மனதளவில் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் இதற்கு நஷ்டஈடு வழங்கவேண்டும் எனவும் அவர்கள் கோரியிருந்தனர். (ஐ)

## ஆப்கன் எல்லையில் பாக். துருப்புகள் தேடுதல்

இஸ்லாமாபாத்,ஒக்.3

பாகிஸ்தானில் ஆப்கன் எல்லையை ஒட்டிய பழங்குடியினப் பகுதியில் பாக். இராணுவத்தினர் அதிரடி தேடுதல் வேட்டையை நடத்தினர்.

பாகிஸ்தானில் ஆப்கன் எல்லையை ஒட்டிய வடக்கு வாசீரிஸ்தான் பகுதியில் அல்-கெய்டா மற்றும் தலிபான் தீவிரவாதிகள் பதுங்கியுள்ளனர். இவர்களை வேட்டையாட அடிக்கடி பாகிஸ்தான் இராணுவத்தினர் இப்பகுதியில் தேடுதல் வேட்டையை நடத்துவர்.

வெள்ளியன்று இப்பகுதியில் ஒரு இராணுவ மேஜர் உட்பட எட்டு இராணுவத்தினர் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இதையடுத்து அப்பகுதியில் நேற்று முன்தினம் பாக். இராணுவத்தினர் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர். தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலை அடுத்து தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.விமானப் படையைச் சேர்ந்த இரண்டு விமானங்கள், ஹெலிகாப்டர்கள் தேடுதல் பணியில் ஈடுபட்டன.(ஐ)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சிமி பள்ளத்தாக்கில் பரவிவரும் காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் தீயணைப்பு வீரர்கள்.

## சீக்கிய மதம் பற்றி அமெரிக்கர்களுக்கு விளக்கம்

வாஷிங்ரன்,ஒக்.3

சீக்கிய மதத்தைப் பற்றி அமெரிக்கர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்வதற்காக அமெரிக்காவில் வாழும் சீக்கிய சமுதாயத்தினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக, அமெரிக்காவின் ராக்விஸ் நோர்த், போடோமாக் ஆகிய இடங்களில் தாங்கள் கட்டியுள்ள குருத்துவராக்களில் சீக்கியர்கள் அல்லாதோரும் சென்று வர அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு குருத்துவாரக்களிலும் சீக்கியர்களின் கலாசாரம், பண்பாடு போன்றவற்றை விளக்கும் குறும்படம் காட்டப்படும். இந்திய உணவும் வழங்கப்படும். இது குறித்து குரு கோபிந்த் சிங் அறக்கட்டளையைச் சேர்ந்த சர்தாஜ் சிங்தாமி கூறுகையில், அமெரிக்காவில் இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின் சீக்கியர்கள் பலர் தாக்குதலுக்கு உள்ளாயினர். படித்த அமெரிக்கர்களிடையே சீக்கிய மதத்தைப் பற்றி விளக்குவதே எங்கள் நோக்கம் என்றார்.

அமெரிக்கர்கள் சீக்கியர்களை இஸ்லாமியர்கள் எனக் கருதுவதால் அங்கு பகைமை உணர்வு உருவாகி வருகிறது. (ஐ)

# வாழ்த்துகின்றோம்



சேவைக்கோர் இலக்கணமாய்த் திகழ்ந்து தனது உன்னதசேவை, திறமை என்பனவற்றின் பயனாக யாழ்.மாநகரசபை ஆணையாளராகப் பதவி ஏற்றிருக்கும்

**சீ.வி.கே.சிவஞானம்**

அவர்களை மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**V.S சிவரட்ணம்,**
(அரச, தனியார் வங்கி மதிப்பீட்டாளர்)
டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.

(சி.45382) (39-46-45-13)

# 4ஆம் ஆண்டு நினைவு தினம்



அமரர் **தொண்டர் கந்தையா திருநாவுக்கரசு**
*(வட இலங்கை சர்வோதய சங்கத் தலைவரும் ஜீவதானியும்)*

*திதி: 03-10-2005*

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01-03-1939 | 03-10-2001 |

**"என்கடன் பணி செய்து கிடப்பதே"**

இன்று (03-10-2005) திங்கட்கிழமை வட இலங்கை சர்வோதய சேவை வளாகத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவுதின நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சேவை வளாகம்,
புங்குடுதீவு. (40645)(46-45-13)

**வட இலங்கை சர்வோதய குடும்பத்தினர்.**

## கடைகள் வாடகைக்கு வழங்குதல்

பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் புதிதாகக் கட்டப்பட்ட ஏழு கடைகளும் வாடகைக்குக் கொடுக்கப்படவுள்ளன.
தொடர்புகளுக்கு:
**சி.ரூபாவதி**
(40598) 021-222 5801, 077 6943470 (21-46-45-13)

# நெடுந்தீவுக் கோட்டையில் கடற்படையினர் சிரமதானம்

நல்லூர்,ஒக்.3

நெடுந்தீவின் வரலாற்றுச் சான்றுகளில் ஒன்றான போர்த்துக்கேயர் கோட்டையில் வளர்ந்திருந்த பற்றைகள், செடிகளைநெடுந்தீவில் உள்ள கடற்படையினர் சிரமதானம் மூலம் வெட்டித் துப்புரவு செய்தனர்.

புராதனசின்னமாக விளங்கும் இக்கோட்டை பாதுகாக்கப்படாத நிலையில் பற்றைகளும் செடிகளும் கொடிகளும் வளர்ந்து கவனிப்பாரற்ற நிலையில் இருந்து வந்தது.

நெடுந்தீவு மத்தியில் உள்ள மணல் துறைக் கடற்கரையை அண்டி அரசினர்வைத்தியசாலைக்குச் சமீபமாக இந்தக் கோட்டை அமைந்துள்ளது.

இதேசமயம் உல்லாசப்பயணிகளைக் கவரும் முக்கிய சின்னமான குதிரைகளின் இறப்பும் தற்போது அதிகரித்து வருகின்றது.

கடந்த ஒருசில தினங்களில் வெல்லை,நெழுவினி,கொறுவாண்டுகேணிகளில் குதிரைகள் இறந்து கிடந்ததையும் அவற்றை அகற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படாததினால் அப்பகுதிகளில் துர்நாற்றம் வீசியதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

(எ-111)

## தாயக வீரர் கௌரவிப்பு

தமிழீழ விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் இளையோர் செயற்பாட்டு நிறுவனம் அகில இலங்கை ரீதியாக நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற தாயக வீரர்களைக் கௌரவிக்கவுள்ளது.

இக்கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 5ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (எ-305)

# துன்பந்தீர அருள்வாக்கு

குழந்தைப் பேறில்லாதவர்கள், திருமணத்தடை, தோஷம் உள்ளவர்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாடு செல்லத்தடை, தொழிலில் முன்னேற்றமின்மை, கல்வியில் முன்னேற்றமின்மை, தீராதநோய் தீர அருள்வாக்குக் கூறப்படும். கொழும்பு-06, பெர்ணாந்து வீதியிலுள்ள துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வமான நாகபூசணி அம்மன் ஆலயத்திலிருந்து வந்த ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று (03-10-2005)திங்கட்கிழமை முதல் 05-10-2005 வரை யாழ்ப்பாணத்தில் அருள்வாக்குக் கூறவுள்ளார்.

*தொடர்பு கொள்ள வேண்டிய இடம்:*

**ஞானவைரவர் ஆலயம்**
**கலாசாலை வீதி, 2ஆவது ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.**
பூசை நேரம்: காலை 10.30 மாலை 6 மணி
04-10-2005 விஷேட பூசை, அபிஷேகம், அன்னதானம் நடைபெறும்.

(40701)(46.45.13)

Danish Demining Group

# VACANCY NOTICE

**Post Title:** Administrative Assistant
**Duty Station:** Jaffna

**Major Duties and Responsibilities:**
- Answering phone calls
- Covering the Demining Operations
  Maintain the log sheets
  Maintain the Accident reports
- Collection, analysis and presentation of information for all operational areas. (Mine field)
- Handling the files.
- Updating Human resources database.
- Perform any other duties as required.

**Educational Background:**
- Bachelor's Degree or Secondary Education with a credit or distinction passes in English.
- Experience in the use of computer applications, and be able to type Tamil and English.
- Should be able to work independently.
- Ability to work in an international environment.

**Language Requirements:**
Excellent command of English, the working language of the duty station, both oral and written.

**How to apply:**
Duly filled Applications should be sent under registered cover to reach the Administrator, Danish Demming Group, 18/10, Wyman Road, Jaffna.

**Closing Date:** Monday 15th October 2005.
Women are encouraged to apply.

(40618)(46)

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம் - யாழ்ப்பாணம்.
*"வன்முறையற்ற வழிகளில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் நோக்கி..."*

# பதவி வெற்றிடங்கள்

பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றோம்.

01- ஆவணப்படுத்தல் உத்தியோகத்தர் (Documentation Officer)
பிரதான செயற்பாடுகள்:
- செயற்பாட்டுக் குழுக்களை நெறிப்படுத்தல்.
- மனித உரிமை மீறல்களுக்கான ஆவணப்படுத்தல் முறையை கணனியில் உருவாக்கல்.
- சாதாரண மக்களுக்கு மனித உரிமைகள் பற்றிய பயிற்சி வழங்கல்
- மக்களிடம் இருந்து தரவுகள் பெறுதல்.

02- தொடர்பாடல் உத்தியோகத்தர் (Communication Officer)
பிரதான செயற்பாடுகள்:
- செயற்பாட்டுக் குழுக்களை நெறிப்படுத்தல்.
- சமாதான நூலகம் (Pecae Library) அமைத்தல்.
- பொதுத் தொடர்புகள் (Public Relation)
- இணையத்தளம் (Website) நிர்வகித்தல்.
- தகவல்ப் பிரசுரம் (Newsletter)
- பொதுத் தொடர்புகளில் மக்களைப் பயிற்றுவித்தல்.

03- வரவேற்பாளர் (Receptionist)
பிரதான செயற்பாடுகள்:
- நிறுவனத்திற்கு வருபவர்களை வரவேற்றல்.
- தொலைபேசி அழைப்புக்களை சிறந்த முறையில் அணுகும் திறமை.
- பூரணமான கணனி அறிவு (MS-Office & DTP)

மூன்று பதவிகளுக்குமான நிபந்தனைகள்:
- ஆங்கிலத்தில் சரளமாக உரையாட, எழுதத் தெரிந்திருக்க வேண்டும்.
- கணனி அறிவு (MS-Office & DTP)
- க.பொ.த. (உ/த) இல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
- வன்முறையற்ற சமாதானப் பணியில் அர்ப்பணிப்பு.
- வேலை தொடர்பான துறைசார் அனுபவம்.

உங்கள் சுயவிபரங்களைக் (Bio Data) கொண்ட விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய இறுதித் திகதி 10.10.2005.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

**இயக்குநர்**
**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான நிறுவனம்**
**இல 08, குருசோ வீதி, சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
**மகேஸ்வரி முத்துதம்பி**
(இளைப்பாறிய ஆசிரியர்)
(தெல்லிப்பழை தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி)

| மண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 05-09-1929 | 03-09-2005 |

அன்பே உருவான எமது அன்னையே!
எமக்கு உயிர் கொடுத்தாய்
வாழ்வதற்குக் கற்றுத் தந்தாய்
அன்பு மழை பொழிந்தாய்
பாசத்தின் சுமையோடு அரவணைத்தாய்
நீங்கள் எமை விட்டுப் பிரிந்தாலும்,
உங்கள் நினைவு எம் நெஞ்சை விட்டகலாது
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

03-09-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவியவர்களுக்கும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தோருக்கும், கடிதம், தொலைபேசி மூலம் எமக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், மற்றும் பல வழிகளில் உதவிகள் பல புரிந்தோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'ஹேம வாசா'
8ஆம் கட்டையடி,
தெல்லிப்பழை. (சி/45384)(46-45-13)

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# இலங்கையில் முதல்முறையாக சர்வதேச அளவிலான தொழில் வாய்ப்பு

## WEB SERVER மூலமாக இணையதளங்களை ஏற்றி மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம்

**Pentium® 4w/HT - 3.0GHz**
**2GB RAM**
**Windows 2003**
**Plesk Administration**
**Unlimited Websites**
**Unlimited MySQL**
**Unlimited MS SQL**
**ASP and ASP DotNET**

இலங்கையிலும் சர்வதேச அளவிலும் தேவையிலுள்ள பல்லாயிரக்கணக்கான இணையதளத்தேவையினை பூர்த்திசெய்யும் விதத்தில் ஒரு **Web Server Account** இனை உங்களதாக்கிக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம்.

## மாதம் ரூபா 2000 மட்டும்

500 தளங்களுக்குமேல் ஏற்றலாம். ஒவ்வொரு தளத்துக்கும் தனியாகக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. உங்கள் வாடிக்கையாளர்களை நிர்வகிக்கும் Admin Plesk Control Panel. வாடிக்கையாளர் தங்கள் தளத்தினை நிர்வகிக்கும் Users Plesk Control Panel.

- க.பொ.த உயர்தர மாணவர்கள், அலுவலர்கள், இளைஞர்கள், யுவதிகள் போன்றோர் பகுதிநேரமாக வீட்டிலிருந்தே செய்யலாம்.
- ஒவ்வொரு தளத்துக்கும் எத்தனை மின்னஞ்சல் முகவரிகளையும், MySQL, MS SQL போன்ற Data Base இனையும் உருவாக்கலாம்
- Plesk Administration மற்றும் அனைத்து தொழில் நுட்பங்களும் இலவசமாக கற்பிக்கப்படும்
- இலங்கையிலும் வெளிநாட்டிலும் ஏராளமான கேள்வி.
- திறமையிருந்தால் போதும். கோடிக்கணக்காக வருமானம் பெறலாம்
- இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் உங்கள் வியாபாரத்தை பெருக்க

**8 கோடி** மின்னஞ்சல் முகவரிகள் இலவசம்

**முதலில் வரும் நூறுபேருக்கு மட்டும்**

## SAAMSTECH

841, Hospital Road, Chundikkuli, Jaffna. 233/4, Kasthuriyar Road, Jaffna.
Ph : 021 - 4591571 021 - 2229505 0773068968

**SAAMSTECH இன் ஆங்கில நேரடி வகுப்புகளில் சேருங்கள்**
**ஆங்கிலத்தினைக் கதைப்பதற்கான வழி அதுவே**



## நம்பமுடியாத விலையில்

# COMPUTER

# Rs. 15000/- Only

366 MHz, 64 MB RAM, 4 GB Hard Disk
**17" COLOUR MONITOR**
முதல் பத்துப்பேருக்கு **Flash Disk** இலவசம்
One Year Service Warranty

கையிருப்பு உள்ளவரை மட்டுமே...

## SAAMSTECH

**841, Hospital Road, Jaffna**
**233/4, Kasthuriyar Road, Jaffna. 021 - 4591571.**

# இங்கிலாந்தின் வழியைப் பின்பற்றுவதற்கு 'உலக லெவன்' கிரிக்கெட் அணி முடிவு



இங்கிலாந்து கிரிக்கெட் அணியின் தந்திரத்தைப் பின்பற்றி 'சுப்பர் சீரிஸ்' தொடரில் ஆஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்று உலக லெவன் அணித்தலைவரான தென்னாபிரிக்க வீரர் ஷேன் போலக் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய அணி உலக லெவன் அணி மோதும் 'சுப்பர் சீரிஸ்' கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 5 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஆஸ்திரேலியாவில் இடம்பெறும் இத்தொடரில் மூன்று ஒரு நாள் போட்டிகளும் ஆறு நாள் கொண்ட டெஸ்ட்போட்டி ஒன்றும் நடக்கவுள்ளன. ஒருநாள் போட்டிக்கான அணித்தலைவராக ஷேன் போலக் உட்பட உலக லெவன் அணி வீரர்கள் ஆஸி வந்துள்ளனர். மெல்போர்னில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே போலக் இவ்வாறு பேட்டி கொடுத்துள்ளார்.

'ஆஷஸ் டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து அணி அபாரமாக ஆடி ஆஸ்திரேலியாவை வென்றது. உலக சம்பியனான ஆஸ்திரேலியாவை வெல்வதற்கான வழியை அவர்கள் காண்பித்துள்ளனர். இதனால் இங்கிலாந்தின் பாணியில் விளையாட முடிவு செய்துள்ளோம்.

இதற்கு இங்கிலாந்து அணியில் விளையாடிய பிளின்ராப், பீட்டர்சன்ஆகியோர் மிகவும் துணைபுரிவார்கள் என்று நம்புகிறேன். ஆஷஸ் வெற்றிக்குக் காரணமான இவர்கள் சுப்பர் சீரிஸிலும் அபாரமாக ஆடி கிண்ணத்தை வென்று தருவார்கள் என எதிர்பார்க்கிறேன். அதே போல மற்ற வீரர்களும் அசத்துவார்கள். ஆஸ்திரேலியாவைப் பொறுத்தவரையில் சொந்த மண்ணில் போட்டி நடப்பது சாதகமான விடயம்' இவ்வாறு போலக் மேலும் கூறியுள்ளார்.

# வெற்றிக் களிப்பில் மூழ்கிக் கிடக்கும் இங்கிலாந்து அணி வீரர்கள்



ஆஷஸ் தொடரை ஜெயித்தாலும் ஜெயித்தார்கள் இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்களை கையில் பிடிக்க முடியவில்லை. போட்டி முடிந்து நாள்கள் பல கடந்து விட்டன. ஆனாலும் கொண்டாட்டத்திற்கு குறைவில்லை. தினம்தினம் விருந்துதான்.

இந்த உற்சாகத்தில் இங்கிலாந்து அணி வீரர் கெவின் பீட்டர்சன் சுவாரஸ்ய தகவல் பகிர்ந்து கொண்டார். ஆஷஸ் தொடரை ஜெயித்த சில நாள்கள் கழித்து வீரர்களைப் பாராட்டுவதற்காக அழைத்தாராம் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர். பிரதமர் இல்லத்துக்கு வீரர்கள் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர். முன்தினம் இரவெல்லாம் தூக்கமில்லாமல் குடித்து ஆட்டம் போட்டதால் பிரதமரின் பாராட்டு நிகழ்ச்சியில் நிறைய வீரர்களுக்கு மயக்கம். அவர்களுக்கு பிரதமர் இல்லத்தில் நடந்ததே நினைவில் இல்லை. ஒவ்வொரு வீரரையும் கைகுலுக்கி வாழ்த்தினார் பிளேயர்.

அந்த நிகழ்ச்சியை அடுத்த நாள் வீடியோவில் பார்த்த பிறகுதான் நிகழ்ச்சி நடந்ததே நினைவுக்கு வந்தது என்றார் கெவின்.

மூன்று மாதமாக இரவு விருந்துப் பக்கமே தலைவைத்தும் படுக்கவில்லை. கவனம் எல்லாம் ஆஷஸ் வெற்றி மீது மட்டுமே நினைத்ததைச் சாதித்தாகிவிட்டது. இப்போ மனம் போன போக்கில் குடித்துக் கொண்டாடுகிறோம். இது தப்பா என்று கேள்வி கேட்கிறார் கெவின். இங்கிலாந்து வீரர்களை ராணி எலிசபெத் நிறையவே பாராட்டியிருக்கிறார். ஒவ்வொரு வீரர்களின் ஆட்டம் பற்றியும் கிரிக்கெட் விமர்சகர் அளவுக்கு சிலாகித்து கடிதம் அனுப்பினாராம் ராணி.

# நீறு பூத்த நெருப்பாக மாறும் சப்பல் - கங்குலி விவகாரம்





இந்தியக் கிரிக்கெட் அணிப் பயிற்சியாளர் கிரெக் சபபல் - அணித் தலைவர் சௌரவ் கங்குலி இடையிலான மோதலால் இந்திய அணியின் அடுத்த தலைவர் யார் என்ற கேள்வி கிரிக்கெட் ஆர்வலர்கள் மத்தியில் தற்போது ஏற்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இந்தியாவில் இடம்பெறவுள்ள இலங்கையுடனான தொடருக்கு கங்குலி தலைவர் பதவியைத் தொடர்வாரா அல்லது புதிய அணித் தலைவர் அறிவிக்கப்படுவாரா? என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள் மத்தியில் காணப்படுகிறது.

சிம்பாவே தொடரின்போது இந்திய அணியில் பெரும்புயல் ஏற்பட்டிருந்தது. தன்னைப் பதவி விலகச் சொல்லுகிறார் சப்பல் என்று கூறி பரபரபபு ஏற்படுத்தினார் கங்குலி. அணித் தலைவர் பதவிக்கே கங்குலி தகுதி யில்லாதவர் என பயிற்சியாளர் சப்பல் தெரிவிக்க சர்ச்சை தீவிரமானது. இப்பிரச்சினைக்கு ஆறுபேர் கொண்ட குழு இரு வருக்குமிடையில் சமரசத் தீர்வுகண்டது. ஆனாலும், அடுத்துவரும் தொடருக்கு கங்குலி அணித் தலைவர் பதவியில் தொடர்வாரா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.


இந்தச் சூழ்நிலையில் இலங்கைத் தொடருக்கான புதிய இந்திய அணிக்கான தலைவர் எதிர்வரும் 13ஆம் திகதி தெரிவு செய்யப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த மாதம் இந்தியா செல்லும் இலங்கை அணி 7 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. இந்தியாவின் மொஹாலியில் எதிர்வரும் 13ஆம் திகதி இடம்பெறும் தேர்வுக்குழுக் கூட்டத்தில் புதிய அணித் தலைவர் யார் என்று அறிவிக்கப்படும் மறுநாள் இந்திய அணி தெரிவுசெய்யப்படும் இது தற்காலிகமான அறிவிப்புத்தான். இந்தத் திகதிகள் இதுவரை உறுதி செய்யப்படவில்லை. முன்னணி வீரர்கள் முழு உடல் தகுதியுடன் இருந்தால் மட்டுமே தெரிவுசெய்ய வேண்டும் என்பதில் தேர்வுக்குழுத் தலைவர் கிரண் மோரே உறுதியுடன் இருக்கிறார் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இத்தொடரில் முன்னணி வீரர் சச்சின் டெண்டுல்கார் பங்கேற்பது குறித்து கிரண் மோரே பேசவுள்ளார். இடது முழங்கை காயத்துக்கு சத்திர சிகிச்சை செய்துள்ள சச்சின் தற்போது குணமடைந்து வருகிறார். இவரை பரிசோதித்து வரும் டாக்டர் ஆனந்த்கோசி உள்ளூர் தொடரில் விளையாடிய பின்னர் சர்வதேசப் போட்டிகளில் பங்கு பற்றலாம் எனக் கருத்துக் கூறியுள்ளார்.

# பிரிட்டிஷ் குடியுரிமைபெற பாக்.வீரர்கள் முண்டியடிப்பு

பிரிட்டனில் குடியுரிமை பெறும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. முகமது அக்ரம் என்ற டெஸ்ட் வீரர் பிரிட்டனில் குடியுரிமைபெற்று ஒரு மாதிரி அங்கு தங்கிவிட்டார். அவர் பிரிட்டனில் உள்ளூர் போட்டிகளில் விளையாடி காலத்தை ஓட்டுகிறார். தெருவோர கிரிக்கெட் ஆடியவர்கள்கூட லண்டனில் குடியுரிமை பெற்றுவிட்டார்கள். ஆசை யாரைத்தான் விட்டது. முன்னணிச் சுழற்பந்து வீச்சாளர்களான சக்லைன் முஷ்டாக், முஷ்டாக் அகமது இருவரும் பிரிட்டனில் தயாராகி விட்டார்கள். அவர்கள் இருவரையும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை ஏறக்குறைய கைகழுவி விட்டது. விளையாடிய கை கால்கள் சும்மா இருக்குமா? அடுத்த விமானம் பிடித்து லண்டனில் இறங்கிவிட்டனர். அங்கு பிரதேசப் போட்டிகளில் விளையாடி வருகின்றனர். சஸெக்ஸ் அணியில் அகமதும் ஸர்ரே அணியில் சக்லைனும் பந்தைச் சுழற்றுகிறார்கள் பாகிஸ்தான் அணியில் வாய்ப்புக் கிடைப்பது இவர்களுக்குத் திரைக் கொம்பு என்று நினைத்தார்கள். எனவே, பிரிட்டன் குடியுரிமை கேட்டு விண்ணப்பமும் போட்டியிருகிறார்கள் இருவருக்கும் கிடைத்தால் எஞ்சிய காலத்தை பிரிட்டனிலேயெ இங்கேயே ஓட்டிவிடலாம் என்ற யோசனையாம்.

# கலாசாரத்தைப் பேணவில்லை என 'டெனிஸ்' வீராங்கனைக்கு எதிர்ப்பு



அணியும் ஆடை பற்றிய விவகாரம் இப்பொழுது வீராங்கனைகளுக்கு தலைவலியாக மாறத் தொடங்கியுள்ளது.

தற்போது பரபரப்புக்குள்ளாக்கியுள்ள விவகாரம் இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா மிர்சா அணிந்து விளையாடிய குட்டைப் பாவாடை சம்பந்தப்பட்டதாகும்.

கல்வி நிலையங்களில் ஆடைக்கட்டுப்பாடு இருப்பது போல, டெனிஸ் களத்திலும் இது போடலாம். அது போடக்கூடாது என்று சர்ச்சை. தொடர்பு சாதனங்கள் தினமும் இதனைப் பற்றித்தான் பேசுகின்றன. குட்டைப்பாவாடை விவகாரம் இந்தளவுக்கு முக்கியத்துவம் பெறும் என்று முஸ்லிம் பெண்ணான சானியா மிர்சா நினைத்துக்கூடப் பார்த்திருக்க மாட்டார்.

சினிமா நடிகைகள் போன்று உடலைக்காட்டும் குட்டைப் பாவாடை அணிந்து சானியா டெனிஷ் விளையாடக் கூடாது. பழைய காலம் போல, முழு உடை அணிந்து தான் விளையாட வேண்டும் என்பது முஸ்லிம் அமைப்புகள் குரல் எழுப்பி பிரச்சனையை ஆரம்பித்து வைத்தன. அதனை ஆளாலுக்குப் பிடித்துக்கொண்டு தினம்தினம் அறிக்கை மேல் அறிக்கையாக வெளியிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இதற்கிடையில் அவர் என்ன உடை வேண்டும் என்றாலும் போடட்டும் ஆனால், விளையாடும் போது 'சர்வீஸ்' ஒழுங்காகப் போடவேண்டும் என்கின்றது ஒரு குழு அவருக்கு ஆதரவாக. தேர்தல் காலம் இன்று ஆரம்ப மாகாததால் அரசியல் கட்சிகளும் இந்த விடயம் பற்றி அறிக்கைகளை வெளியிடுகின்றன. இந்த விடயத்தால் மிகவும் பாதிக்கப்பட்டவர் சானியா மிர்சா மட்டும்தான்.

இதனை அடுத்து மதவாத அமைப்புகள் அவர் மீது தாக்குதல் நடத்தி விடலாம் என்ற பயம் காரணமாக கெடுபிடி, பாதுகாப்புக் கொடுத்திருக்கிறார்கள். ஜதராபாத்தில் ஜாலியாக சுற்றலாம் என்றால் கூட துப்பாக்கிகளுடன் ஒரு படை அவர் பின்னால் பாதுகாப்புக்கு வருகிறது. இந்த குட்டைப்பாவாடை விவகாரத்தால் சானியாவுக்கு பெரும் தலைவலி.




# மனைவியுடன் இணைந்துவாழ வோர்ன் பகீரதப் பிரயத்தனம்



பிரிந்துள்ள என் மனைவியுடன் மீண்டும் நான் இணைவேன் என்று ஆஸ்திரேலிய சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை (623) வீழ்த்தி உலக சாதனையாளராக வலம் வருபவர் ஷேன் வோர்ன் 36 வயதுடைய மாயஜால சுழற்பந்து வீச்சாளர் வோர்ன் அளித்த பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:

ஆஷல் போட்டியில் இங்கிலாந்து அணி தொடரைக் கைப்பற்றி னாலும் இப்பொழுதும் எமது அணிதான் (ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணிதான்) சிறந்த அணி என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை. எங்கள் அணி நீண்ட நாள்களாக உள்ளூர்ப் போட்டிகளில் மட்டுமன்றி வெளி நாடுகளிலும் எல்லா நாடுகளுக்கும் எதிராகவும் வெற்றி பெற்று இருக்கிறது. நீண்ட நாள்களாக நாங்கள் சிறந்த அணி என்பதனை ஏற்றுக்கொள்வார்கள்.

ஒருநாள் போட்டியில் மட்டும் பங்களாதேஷ் அணி ஆஸ்திரேலி யாவை தோற்கடித்தது என்பதற்காக அந்த அணியை உலகின் சிறந்த அணி என்று கருதிவிட முடியாது. ஒரு தொடரை வைத்துக்கொண்டு எமது அணி யைக் குறை கூறக்கூடாது.

ஆஸ்திரேலிய அணித்தலைவர் பொண்டிங் தனது பணியைச் சிறப்பாக செய்து வருகிறார். ஆஷஸ் கிண்ணத் தோல்விக்காக அவரை பதவியில் இருந்து விலகும்படி கூறுவது சரியில்லை. அவர் தொடர்ந்தும் சிறப்பாகச் செயற்படுவார் நாங்கள் மீண்டும் வலிமையுடன் விளங்குவோம்.

என்னை விட்டுப்பிரிந்து சென்றுள்ள எனது மனைவி சிமோனுடன் மீண்டும் நான் ஒன்று சேருவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது தனித்தனியாக நாம் பிரிந்து வாழ்ந்து வந்தாலும் இன்னும் நல்ல நண்பர்களாகத் தான் இருக்கிறோம். எப்பொழுதும் நாம் பேசிக் கொள்வோம். அதேவேளையில், இருவருவருக்கும் என்ன தேவை என்பதனை கலந்தாலோசிக்க வேண்டும். எந்தப் பாதையில் இருவரும் செல்லவேண்டும் என்பதனைப் பேசித் தீர்மானிக்க வேண்டும் - என்றார் வோர்ன்.

# மீண்டும் களமிறங்குகிறார் 'மாஸ்டர் பற்ஸ்மன்' சச்சின்

மும்பாய்,ஒக்.3



எப்போ வருவார் என எதிர்பார்க்கப்பட்ட சச்சின் டெண்டுல்கர் வந்தே விட்டார். மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகு சாலஞ்சர் தொடரில் களமிறங்குகிறார்.

இந்திய அணியின் 'மாஸ்டர் பற்ஸ்மன்' சச்சின் இடது முழங்கை (டென்னிஸ் எல்போ) காயம் காரணமாக அவதிப்பட்டு வந்தார். இதற்காக சத்திரசிகிச்சை செய்து கொண்ட இவர் கடந்த சில மாதங்களாக எந்தத் தொடரிலும் பங்கேற்கவில்லை. சமீபத்தில் நடந்த சிம்பாப்வே தொடருக்கான அணியில் இடம் பெற்ற போதும், காயம் முழுமையாக குணமடையாததால் விளையாட மறுத்துவிட்டார்.

இவரைப் பரிசோதித்து வரும் டாக்டர் ஆனந்த் ஜோஷி 'உள்ளூர் தொடரில் பங்கேற்ற பிறகு சர்வதேச போட்டிகளில் பங்கேற்கலாம்' என ஆலோசனை தெரிவித்தார். இது குறித்து இந்திய அணி தேர்வுக்குழு தலைவர் கிரண் மோரே, உடற் பரிசோதனையாளர் ஜான் குளோஸ்டரிடம் விவாதித்தார். இதன் பின், வதோதராவில் கிரண் மோரே அளித்த பேட்டியில், ''சச்சின் தற்போது போட்டியில் பங்கேற்கும் அளவுக்கு முழுமையாக குணமடைந்து விட்டார் என குளோஸ்டர் தெரிவித்துள்ளார். இதனால் சாலஞ்சர் தொடரில் சச்சின் பங்கேற்பார்,'' என கூறினார்.

டில்லியில் எதிர்வரும் 10 முதல் 13ஆம் திகதி வரை நடக்கும் சாலஞ்சர் கோப்பை தொடரில் இந்தியா சீனியர், 'ஏ', 'பி' அணிகள் மோதுகின்றன. இதற்கான வீரர்கள் தேர்வு டில்லியில் நடக்கிறது. இதில் இந்திய சீனியர் அணியில் சச்சின் இடம் பெறுவார் எனத் தெரிகிறது. இதன் மூலம் அடுத்து நடக்கவிருக்கும் இலங்கை ஒருநாள் தொடரில் சச்சின் பங்கேற்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.சத்திரசிகிச்சை ஆபரேஷன் செய்து கொண்டார் சச்சின். இதன் பின் எந்த சர்வதேச, உள்ளூர் போட்டியிலும் பங்கேற்கவில்லை. நான்கு மாத இடைவெளிக்குப் பிறகு தற்போது சாலஞ்சர் தொடரில் பங்கேற்கவுள்ளார். காயம் காரணமாக இலங்கை, சிம்பாப்வே தொடர்களை இழந்துள்ளார். எதிர்வரும் 5ஆம் திகதி தொடங்கும். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான சூப்பர் சீரிஸ் தொடரிலும் பங்கேற்கவில்லை என அறிவித்தார்.

# உரும்பிராய் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கக் கோரிக்கை

உரும்பிராய்,ஒக்.3

உரும்பிராய் கிராம அரசினர் வைத்திய சாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைத்து உரிய வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டுமென இப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வைத்தியசாலை வசதிகள் அற்ற நிலையில் வாடகைக் கட்டடத்தில் கடந்த 47 வருடகாலமாக இயங்கிவருகிறது.

இந்த வைத்தியசாலையில் குடிதண்ணீர் மற்றும் இதர வசதிகள் ஏதுமில்லை. சொந்தக் காணி இன்றி இயங்கிவரும் இந்த வைத்திய சாலையைப் புனரமைக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் எதுவும் முன்வருவதில்லை.

இதனால், பல்வேறு வசதிக்குறைபாடுகளுடனேயே தொடர்ந்தும் இயங்கிவருகிறது.

இக்கிராம கர்ப்பிணித்தாய்மார்கள், நோயாளர்கள், சிறுவர்கள் ஆகியோரின் வைத்திய தேவைகளைப் பூர்த்திசெய்யும் இந்த வைத்தியசாலைக்குச் சொந்தக் காணி வேண்டுவதற்குக் கிராமப் பெரியோர்களும் வசதி படைத்த நலன்விரும்பிகளும் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(3-154-204)

# காரைநகரில் காலபோக செய்கை ஆரம்பம்: கட்டாக்காலிகளைக் கட்டிவளர்க்க அறிவுறுத்தல்

காரைநகர்,ஒக்.3

காரைநகர் பிரதேசத்தில் காலபோக நெற் செய்கை ஆரம்பிக்கப்பட உள்ளதால் கால் நடைகளைக் கட்டிவளர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பினை காரைநகர்ப் பகுதி விவசாய சம்மேளனம் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் திகதி வரை கால்நடைகளைக் கட்டிவளர்ப்பது என காரைநகர் கமநல சேவைகள் நிலையத்தில் நடைபெற்ற காலபோக நெற்செய்கை தொடர்பான கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காரைநகர்ப் பகுதி விவசாய சம்மேளனத் தலைவர் எஸ்.சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் எஸ்.சோதிநாதன் காரைநகர் பிரதேச கிராம சேவையாளர்கள், விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கட்டாக்கலி மாடு ஒன்றினைப் பிடிப்பதற்கு 500 ரூபாவும் ஒருநாள் பராமரிப்புச் செலவாக 50 ரூபாவும், ஆடு ஒன்றினைப்




பிடிப்பதற்கு 200 ரூபாவும் ஒருநாள் பராமரிப்புச் செலவாக 25 ரூபாவும் அறவிடுவது எனவும், பகலில் பயிர்களுக்கு அருகில் கால்நடைகளைக் கட்டி மேய்க்க முடியாது எனவும் [illegible] தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த காலங்களில் செப்ரெம்பர் மாத இறுதிப் பகுதியில் நெல் விதைப்புப் பணிகள் நிறைவுபெற்றுவிடும். ஆனால், இவ்வாண்டு மழை பெய்யாத காரணத்தினால் நெல் விதைப்புக்கான ஆரம்பக்கட்டப் பணிகளைக் கூட மேற்கொள்ள முடியாது இருப்பதாக விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகரில் ஆயிரத்து இருநூறு ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3-73)

## முதன்மைக் கிராமமாக கோட்டைக்காடு தெரிவு

நல்லூர்,ஒக்.3

நெடுந்தீவு கோட்டைக்காடு பகுதி முதன்மைக் கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

'நியாப்' திட்டத்தின் கீழ் இங்கு பொது மண்டபம், பொதுக்கிணறு அமைக்கப்படவுள்ளதுடன் வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(3-111)

## நெடுந்தீவில் சிறுவர்தின நிகழ்வு

நல்லூர்,ஒக்.3

நெடுந்தீவில் முன்பள்ளிகள் இணைந்து சிறுவர் தின விழாவைக் கொண்டாடின. தென்னிந்திய திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலையத்தில் சபையின் குரு வண.ஜோன் செல்வம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் சிறுவர்களின் பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெற்றன.(3-111)

## மத்தியஸ்தர் சபை நேர்முகத் தேர்வு

கொக்குவில்,ஒக்.3

யாழ். மாவட்டத்தில் மத்தியஸ்தர் சபைகள் அமைப்பதற்காகக் குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதற்கென மத்தியஸ்தர் சபைகள் ஆணைக் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ள பிரதேச செயலர் பிரிவுகளும் திகதிகள் பற்றிய விவரங்களும் வருமாறு:-

எதிர்வரும் 4ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு உடுவில் பிரதேச செயலகத்திலும் 5ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலகத்திலும் பிற்பகல் 2மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திலும் 6ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்திலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

பிரதேச செயலர்களினால் தெரிவுசெய்யப்பட்டவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் உரிய நேரத்தில் பிரதேச செயலகங்களில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்றும் -

நேர்முகப் பரீட்சையில் அதிகூடிய தகுதியுள்ளவர்கள் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட பின் அவர்களுக்கு ஆணைக் குழுவினால் நியமனம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தில் ஏற்படும் சிறு பிரச்சினைகளைப் பேச்சுகள் மூலம் தீர்த்து வைப்பதே மத்தியஸ்தர் சபைகளின் கடமை என்றும் -

ஏற்கனவே யாழ்ப்பாணம், வேலணை, ஊர்காவற்றுறை, சங்கானை, நல்லூர் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

(எ-76)

## வரணி வடக்கில் பொதுமண்டபம்

[illegible]ரணி,ஒக்.3

வரணி வடக்குப் பகுதியில் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவியுடன் பொது மண்டபம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடுகைசெய்யும் நிகழ்வு கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது.

வரணி வடக்கு ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத் தலைவர் கோ.திலகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஆசியுரையை க.தியாகராஜாக் குருக்கள் நிகழ்த்தினார்.

கட்டடத்துக்கான அடிக்கல்லை தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் நட்டுவைத்தார்.

நிகழ்வில் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட நிறுவனப் பிரதிநிதிகளான தீபன், அகிலன் மற்றும் வரணி வடக்கு கிராம அலுவலர் சி.சச்சிதானந்தன், சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் இரகுநாதன், வரணி சமுர்த்தி வங்கி முகாமையாளர் சி.யோகராசா ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர். பொது நிறுவனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (3-170-204)

# முதியோர், சிறுவர் தினப் போட்டி முடிவுகள்

வலி.தெற்கு, ஒக்.3

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நடைபெறவுள்ள சர்வதேச சிறுவர் - முதியோர் தினவிழாவையொட்டிப் பாடசாலை ரீதியாக நடைபெற்ற கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இப்போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்று பரிசுபெறுவோர் விவரம் பின்வருமாறு:-

**சர்வதேச சிறுவர் தினம்**

கவிதை - பிரிவு I- க.தசாங்கன் -(தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

பிரிவு II -சி.கோசலா - (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), ஆ.நிறைசெல்வி - (மல்லாகம் மகாவித்தியாலயம்)

கட்டுரை - பிரிவு I - த.கிரிசான் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), றே. றொனால்ட் - (மயிலிட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை), சி.நிசாந்தி (மயிலிட்டி றோ.க.பா.),

பிரிவு II - பா.லோகதுர்க்காயினி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), அ.அர்ச்சனா (மல்லாகம் மகாவித்தியாலயம்), சு.கோபிகா (அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்),

பிரிவு III -ம.மதுரா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

**சர்வதேச முதியோர் தினம்**

கவிதை- பிரிவு I -சௌ.பிரணவன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி).

பிரிவு II -தி.டிலக்சனா (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), ப.பிரியதர்சினி (கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்), த.நிரோஜா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி),

பிரிவு III -ச.தீசன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) ந.கோபிநாத் (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்),

கட்டுரை - பிரிவு I - சி.சாளினி (மல்லாகம் மகாவித்தியாலயம்), ஜெ.கௌதமன் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பு.கீர்த்தி (மல்லாகம் மகாவித்தியாலயம்),

பிரிவு III - து.டஜிதா (இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்), யோ.காயத்திரி (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி) இவர்களுக்கான பரிசில்கள் வலிகாமம் வடக்கு சர்வதேச சிறுவர் - முதியோர் தின விழாவின்போது வழங்கப்படவுள்ளன. (3-152)

# நல்லொழுக்க தின நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.3

'போரூட்' யாழ். மேற்குத் திட்டத்தின் அனுசரணையுடன் உடுவில், தெல்லிப்பழைப் பிரிவு 'சக்தி' அமைப்பினால் நடத்தப்படவிருக்கும் சர்வதேச நல்லொழுக்க தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

'சக்தி' அமைப்பின் தலைவர் இ.சுரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார்.

கௌரவ விருந்தினர்களாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் செ.கதிர்காமத்தம்பி, மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சிவராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக 'போரூட்' யாழ். மேற்குத் திட்ட இணைப்பாளர் அ.டெனி கொன்ஸ்ரன்ரைன், வலி.வடக்குப் பிரதேசசபை கணக்குப் பதியுநர் திருமதி த.சிவயோகி, உடுவில் கல்விக்கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.கைலாசநாதன் ஆகியோர் கலந்துகொள்வர். 'சக்தி' மலர் வெளியீடு, கலை நிகழ்வுகள், பரிசு வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறும். (க)

# 'பேசும் தூரிகை' ஓவியக் கண்காட்சி கல்வியியற் கல்லூரியில் 3 தினங்கள்

யாழ்ப்பாணம்,ஒக்.3

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி சித்திரக் கலைத்துறையினர் எதிர்வரும் 7ஆம், 8ஆம், 9ஆம் திகதிகளில் 'பேசும் தூரிகை' என்னும் ஓவியக் கண்காட்சியை நடத்தவுள்ளனர்.

இக்கண்காட்சியில் முகிழ்நிலை ஆசிரியர்களால் ஆக்கப்பெற்ற படைப்புகள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 7ஆம் திகதி காலை 9 மணிக்கு 'துகிலிகை' என்னும் காலாண்டு ஓவிய சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது.

தீவகம், தென்மராட்சி, யாழ். வலயப் பாடசாலை மாணவர்கள் எதிர்வரும் 7ஆம் திகதியும், வடமராட்சி, வலிகாமம் வலயப் பாடசாலை மாணவர்கள் எதிர்வரும் 8ஆம் திகதியும் கண்காட்சியைப் பார்வையிட வருவதன் மூலம் சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம் என நுண்கலைத் துறை இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரன் கேட்டுள்ளார்.(3-202)








சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு 'வடக்கு சிறுவர் சமூகம்' என்னும் அமைப்பின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றுமுன்தினம் யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சிறுவர் பாதுகாப்பு நிறுவனப் பிரதிநிதிகளுடன் யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா அமர்ந்திருப்பதையும் சிறுவர்களின் பிரச்சினைகளைப் பற்றி சிறுவர்கள் உரையாற்றும் காட்சியையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# அன்பின் அம்மா
# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
## விசாலாட்சி சரவணமுத்து

பூவுலகில்
16-12-1930

தேவர் உலகில்
03-09-2005

"தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை"

### அழைப்பு

எமது அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளும் வீட்டுக்கிரியைகளும் இன்று (03-10-2005) திங்கட்கிழமை மதியம் 12 மணிமுதல் எமது இல்லத்தில் நடைபெறும். அதிகாலை முதல் திருவாசக முற்றோதுதல் பிரார்த்தனை நிகழ்வும் நடைபெறும். அவ்வண்ணம் தாங்கள் குடும்ப சகிதம் நிகழ்வுகளில் பங்குகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து நிறைவுசெய்யும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

### நன்றிநவிலல்

எமது அன்னையின் பிரிவினால் துயருற்றிருக்கும் எமக்குபரிவன்போடு ஆறுதலும், தேறுதலும் வழங்கிய உள்ளங்களுக்கும் நாளை (04-10-2005) நடைபெறும் இறுதி அஞ்சலியிலும் இந்துக் கிரியைகளிலும் கலந்துகொண்டோர்க்கும் இன்றைய 31 ஆம் நாள் நிகழ்வில் பங்குபற்றுபவர்களுக்கும், உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

'குமாரபுரி'
கைதடி வடக்கு,
கைதடி

குடும்பத்தினர் சார்பாக
**சரவணமுத்து**
**இஸ்காந்தவதனன்**

(40580)(50)



# SHINE INTERNATIONAL OVERSEAS EDUCATION PTE LTD

**Registered Company In Singapore & Sri Lanka. Reg No: W/A 61223**

## STUDY IN SINGAPORE WITH GURENTY JOB AFTER TRAINING

Free Advice Visit Us Today
We Will Be In Jaffna This Week
Study In S'Pore Study Overseas
University Offer Visa







*NCC Education*
*Hotel Management*
*(With Intership Salary S$750)*
*Foundation Business*
*Computer Science*
*Hospitality Management*
*Dip In Accounting for Beginners*
*LCCI Sales Markating*
*English Courses*
*Travel & Tourism*
*ITE NITEC Certificate In F&B*

Enter the **World of Computing** with the **Right Step!**

SYSTEM COMPUTER TRAINING CENTRE
Accredited by
*Rutherford University(USA)*
*University of London(UK)*

**Bachelor of Computing & Information Systems**




Call Us For Appointment
Roy - 0714819587,
Kajan - 0779103653
Partheepan - 0773086904

Thenmaradche
Meesalai North,
Kodikamam,
0776699139

Paramesvara Juncation,
Palaly Road,
Thirunelvely, Jaffna.

Singapore Office:
97 Northern Mansion #06-97
Mergui Rd, Singapore.
Tel: 00 65 90213184

# 75ஆவது அகவை நிறைவு காணும் மூத்த பத்திரிகையாளர் கோபு



முன்னோடிப் பத்திரிகையாளர்களில் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் எம்முடன் வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்றால், அது எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்களையே சுட்டி நிற்கும். இவர் இன்றுள்ள மூத்த பத்திரிகையாளர்களுக்குள் மூத்தவர்.

எஸ்.எம்.ஜி அவர்கள் 'வீரகேசரியில்' தொடங்கி, 'ஈழநாடு', 'ஈழமுரசு', 'காலைக்கதிர்', 'செய்திக்கதிர்', 'ஈழநாதம்', 'தினக்கதிர்' (மட்டக்களப்பு), 'சுடரொளி' (கொழும்பு), 'நிகரி' (கொழும்பு) ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியுள்ளார்.

பத்திரிகையையே தன் வாழ்வாக்கிக் கொண்ட கோபு, பத்திரிகைப்பணியில் ஐம்பத்திரண்டு ஆண்டுகளைக் கடந்து, உடல் சற்றுத் தளர்ந்த போதிலும் இன்றும் உளம் தளராமல் உற்சாகத்துடன் தொடர்ந்து பத்திரிகைப் பணியாற்றிவருகிறார். இன்று (03.10.2005) கோபு தமது எழுபத்தைந்து வயதை நிறைவு செய்து பவளவிழாக்காண்கிறார்.

யாழ்ப்பாணம், சுன்னாகத்திலிருந்து ஈழகேசரி என்ற வாரப்பத்திரிகை கால் நூற்றாண்டுக்கு மேலாக வெளிவந்து இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் இலக்கிய கர்த்தாக்களையும், சிறந்த தலைவர்களையும் உருவாக்கிப் பெயர்பெற்றது.

இதன் பின் 1959 ஆம் ஆண்டில் 'ஈழநாடு' வாரப்பத்திரிகையாகத் தொடங்கப்பெற்ற போது அதைத் தினப்பத்திரிகையாக்க வேண்டுமென்ற சிந்தனையே அதைத் தொடங் கிய தங்கராசா, சண்முகரத்தினம் என்ற அபூர்வ சகோதரர்களிடமிருந்தது .

'ஈழகேசரியின்' ஆசிரியராகப் பணியாற்றிய பழம்பெரும் பத்திரிகையாளர் . இராஜ அரியரத்தினம் 'ஈழநாடு' வாரப்பத்திரிகையாகத் தொடங்கியதும் ஆசிரியராகப் பொருத்தமாகப் பொறுப்பேற்றிருந்தார்.

'ஈழநாடு' தினப் பத்திரிகையாக வெளிவர வேண்டும் என ஆவல் கொண்டிருந்த தங்கராசா, 'வீரகேசரியில்' பதவிப்போட்டி காரணமாக திருஹரன் வெளியேறிவிட்டார் என்ற செய்தி கிடைத்ததும் அவரை 'ஈழநாடு' நிர்வாக ஆசிரியராக இணைத்துக்கொண்டார்.

1960 இன் நடுப்பகுதியில் வீரகேசரி ஊழியர் வேலை நிறுத்தமும், அதனைத் தொடர்ந்து நிர்வாகம் கதவடைப்புச் செய்ததும் கோபு என்ற கோபாலரத்தினமும், 'ஈழநாடு' வந்து சேர்வதற்குக் காரணமாக இருந்தது. கோபுவின் இளமையும், துடிப்பும், திறமையும் 'ஈழநாடு' இதழுக்கு உரமானது. ஈழநாடு தினப் பத்திரிகையை உருவாக்கி வளர்த்தார்.

'ஈழநாடு' பத்திரிகையைக் கட்டியெழுப்பிய பெருமையில் பெரும்பகுதி கோபுவையே சாரும். கோபு உணவை மறந்து, உறக்கத்தை மறந்து சில சமயங்களில் தன் வீட்டையே மறந்து, 'ஈழநாடு' பத்திரிகைக்காக உழைத்தவர். அரசியல் மற்றும் சமூக இடர்பாடுகளையெல்லாம் தைரியமாக ஊடறுத்து பத்திரிகையின் இலட்சியத்திற்காக உழைத்தவர் . தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தவர். தமிழ் மக்களை விடுதலைக்காகத் தட்டி எழுப்பியதிலும் கோபுவுக்குப் பெரும்பங்குண்டு. தமிழீழத்தின் முதல் தினப் பத்திரிகையாளர் கோபு என்பதே சரி!

கோபுவிடம் பத்திரிகைப் பயிற்சி பெற்றவர்கள் பலர் இன்று மேலைநாடுகளிலும் நமது நாட்டிலும் பத்திரிகைத்துறையில் துலங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

கோபுவின் அரை நூற்றாண்டுப் பத்திரிகைப் பணியைப் பாராட்டி நமது தமிழ்த் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கடந்த வருடம், 2004 ஜூன் மாதம் 4 ஆம் திகதி தேசியச் சின்னம் பொறித்த தங்கப் பதக்கம் வழங்கிப் பாராட்டியதுடன் விருந்தும் அளித்துக் கௌரவித்தார்.

கோபு இதழியலாளராக மட்டும் நின்றுவிடவில்லை. ஸ்ரீ ரங்கன் என்ற பெயரில் பல சிறுகதைகளையும் எழுதியுள்ளார். எஸ்.எம்.ஜி., பாலரத்தினம், ஊர்சுற்றி எனப் பல பெயர்களில் எழுதுகிறார். திரைவிமர்சனம், இசை விமர்சனம், நூல் விமர்சனம் என்று ஆய்வுத் துறைகளும் அரசியல் ஆய்வுக் கட்டுரைகளும், பொதுக்கட்டுரைகளும் ஆயிரக் கணக்கில் எழுதியுள்ளார். இவை அவருக்கு கைவந்தவையாகும். ஈழ மண்ணில் ஓர் இந்தியச் சிறை, அந்த ஒரு உயிர்தானா உயிர், பத்திரிகைப் பணியில் அரை நூற் றாண்டு ஆகிய நூல்களையும் இவர் எழுதி வெளி யிட்டுள்ளார்.

03.10.1930 யாழ்ப்பாணம், கன்னாதிட்டியில் பிறந்து பெருமாள் கோயிலடியில் வளர்ந்து வாழ்ந்த கோபாலரத்தினம் தமது ஆரம்பக் கல்வியை சேணியதெரு சன்மார்க்க போதனா துவிபாஷா பாடசாலையிலும் பின்னர் இராமகிருஷ்ண மிஷன், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி யிலும் கற்றார். மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் சிவானந்தா வித்தியாலயத்திலும் சில மாதங்கள் உயர்வகுப்பில் படித்தார். சுவாமி நடராஜானந்தா யாழ்ப்பாணம் வந்த சமயங்களில் தொண்டுசெய்யும் பாக்கியமும் பெற்றார்.

2002, 2004 ஆம் ஆண்டுகளில் ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன் முதலிய ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று திரும்பிய கோபு, அங்கு எழுத்தாளர் சங்கங்களின் வரவேற்பையும் பெற்றார். கடந்த வருடம் ஜேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம் இவருக்கு அளித்த வரவேற்புபசாரத்தில் 'ஊடகச் செல்வர்' என்ற பட்டமும் வழங்கிக் கௌரவித்தது.

அரை நூற்றாண்டுக்கு மேல் பத்திரிகையையே வாழ்வாக்கிக்கொண்டிருந்த போதிலும் சொத்து எதுவும் தேடாதவர். தாம் வண்ணை பெருமாள் கோயில் நிலத்தில் கட்டியிருந்த சிறிய வீடுகூட வீதி விஸ்தரிப்புக் காரணமாக இடித்துத்தள்ளியதில் கட்டடப்பொருள்களும், வீட்டிலிருந்த பொருள்களும் எந்த இழப்பீடுமின்றி கண்ணில்படாமலேயே போய்விட்டதென்பது கோபுவுக்குள்ள கவலை. பத்திரிகைத் துறையில் பல வாரிசுகளை உருவாக்கிவிட்ட கோபுவின் வாரிசுகளுக்கு முகவரியில்லாமல் செய்யப்பட்டுவிட்டது என்பது அவரது தீராத கவலை.

- பேனா.


ஓம் ஸ்ரீ ராமஜெயம்

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

## மகோற்ஸவ விஞ்ஞாபனம் - 2005

## விசேட அறிவித்தல்

இன்று (03.10.2005) திங்கட்கிழமை பிற்பகல் (பழையநேரம்) 4.30 மணி முதல் 6.09 மணிவரை சூரியகிரகணம் இருப்பதால் அன்றைய தினம் பிற்பகல் உற்சவம் கீழ்கண்ட நேரப்படி நடைபெறும்.

ஆயத்தம் பி.ப. 1.30 மணி
முதலாம் கால பூசை பி.ப. 1.45 மணி
சாயரட்சை பி.ப. 2 மணி
ஸ்தம்ப பூசை பி.ப. 2.15 மணி
வசந்த மண்டபப் பூசை பி.ப. 3 மணி

பிற்பகல் உற்சவம் நிறைவுபெற்ற பின் பி.ப. 4.15 மணிக்கு தேவஸ்தான திருக்கதவுகள் சாத்தப்படும்.

ஆதீன மகாசபை,
யாழ்.வண்ணை ஸ்ரீவேங்கடேச
வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்.

(சி-45391)(38-11-17)



## உங்களுக்கோர் சேமிப்பு உங்களுக்கோர் இல்லம்

காணி வாங்குதல், வீடு கட்டுதல்,
வீடு வாங்குதல், வீடு திருத்தியமைத்தல்
போன்ற தேவைகளுக்கு கடன் பெற
சேமிப்பு கணக்கு ஒன்றை எங்களுடன்
ஆரம்பியுங்கள்.
மேலும்,
அதியுயர் வட்டியில்
நிலையான வைப்புக்கணக்குகள்.
முதியோர் நிலையான வைப்பிற்கு
விசேட சலுகைகள்.
பிரதிநிதி ஒருவரின் ஆலோசனை பெற
அழையுங்கள் 021 - 222 6258

CBSL
செலிங்கோ வீடமைப்பு கடன் சங்கம்
(லிமிட்டட்)
24, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 6258
(இலங்கையில் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட தனியார் துறை வீடமைப்புச் சங்கமாகும்)

(40594)(38-11-17)


## கைக்கடிகாரம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஒக்.3

யாழ்.போதனா வைத்தியசாலையில் ஆண்களுக்குரிய கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(எ-204)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 11 - 05 - 1926



விண்ணில் 03 - 09 - 2005

அமரர் சிவகுரு பிறைசூடி

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகத் திகழ்ந்தவரே!
ஊர்வளர்ச்சிக்காக உழைத்த உத்தமரே!
இன்னும் பல்லாண்டு எங்களுடன் வாழ்ந்து
வழிகாட்டுவீர்கள் என்றே காத்திருந்தோம்
எங்கள் எண்ணமெல்லாம் கனவாகிவிட்டதே
தங்கள் ஆத்மசாந்திக்கிரியைகள் நடைபெறும்
இந்த நாளில் ஆன்ம சாந்தியின்பொருட்டு இறைவன்
திருவடிகளை இறைஞ்சுகின்றோம்.

சிவகுல வீதி,
உரும்பிராய்.

தங்கள் நினைவுடன் வாழும் :
மனைவி, மக்கள், மருமக்கள், பேரர்கள்.

(40609)(38-11-17)



UNIVERSITY OF MADRAS
INSTITUTE OF DISTANCE EDUCATION
சென்னை பல்கலைக்கழகம்

தேசிய தரமதிப்பீட்டு குழுவால் ஐந்து நட்சத்திர தகுதியும், பல்கலைக்கழக நல்கை ஆணையத்தால் உயர்திறன் மையம் என்ற தகுதியும் பெற்றது'

2005 - 2006 கல்வி ஆண்டிற்கான அனுமதி சேர்க்கை அறிவிப்பு

Regular University Stream
முறைசார் பல்கலைக்கழக அமைப்பு

A/L 3 பாடங்களில் தேர்ச்சி
(Maths,Bio-Science,. Commerce, Arts)
தமிழ் மொழி மூலம் 3 ஆண்டு பட்டப்படிப்பை தொலைதூரக் கல்வி மூலம் தொடரலாம்.

UNDERGRADUATE
3 Year Degree Programme

B.Com Bachelor of Commerce
B.B.A. Bachelor of Business Administration
B.C.A. Bachelor of Computer Application
B.Sc. Psychology
B.A. Tamil
B.A. English

தகவல் மற்றும் நேரடி அனுமதி சேர்க்கை மையம்
ASIAN COMPUTER SYSTEMS
2G, Stanley Road, Jaffna. Tel : 021 222 5677



அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...

வருட சந்தா ரூ300 மட்டுமே

தொடர்புகளுக்கு
இல 3 டொறிங்ரன் அவனியூ
கொழும்பு - 07
தொலைபேசி - 011 2506272

ஆசிரியர் கல்வி விருத்திக்கான திட்டங்களை
அறிந்துகொள்ள வாசியுங்கள் அகவிழி.

விழுது
VILUTHU
ஆற்றல் மேம்பாட்டு மையம்

நமது செய்தி
Namathu Seithi

# ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் அதிபர்
# உயர்திரு. அருணாசலம் ஸ்ரீகாந்தன் அவர்களின்
# சேவைநலன் பாராட்டுச் சிறப்புமலர்— 03.10.2005

## வாழ்த்துச் செய்தி

யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அதிபராக சிறப்பான கடமையாற்றி அகவை அறுபதில் ஓய்வுபெறும் ஸ்ரீகாந்தன் அவர்களின் சேவையைப் பாராட்டி வெளிவரும் மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகிறேன்.

சிறந்த விவசாய ஆசிரியராக ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பணியாற்றிய ஸ்ரீகாந்தன் அவர்கள் அதிபர் பரீட்சையில் சித்திபெற்று அதிபர் சேவையில் இணைந்து கொண்டார். கடந்த சில வருடங்களாக இப்பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டதை யாவரும் அறிவர். இவர் அனைவருடனும் அன்புடனும் பண்புடனும் பழகும் நல்ல இதயம் படைத்தவர்.

கடந்த பல வருடங்களாக ஆசிரியராகவும் அதிபராகவும் சீரிய பணியாற்றி யமைக்காகத் திணைக்களத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். ஓய்வு காலத்தில் குடும்பத்தினருடன் சந்தோசமாக நோய் நொடியின்றித் நீடூழி வாழ எல்லாம் வல்ல பரம் பொருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ப. விக்னேஸ்வரன்
கல்விப்பணிப்பாளர், வலிகாமம் கல்விவலயம்,
சுன்னாகம்.

## நல்ல வழிகாட்டி

பாடசாலை அதிபர் திரு. ஸ்ரீகாந்தன் அவர்களுடைய சேவையை வங்கி மூலமாகவே அறியக்கூடிய சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்தது. அந்த வகையில் எமது மானிப்பாய்க் கிளை அண்மையிலேயே திறந்துவைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இருந்து பாடசாலை மாணவர்களிடையேயும் ஆசிரியர்களிடையேயும் சேமிப்புப் பழக்கத்தை உருவாக்கும் பொருட்டு கணிசமான வாடிக்கையாளரை எமது கிளைக்கு அறிமுகப்படுத்தி வைத்தபெருமை அவருக்குரியது. பலவிதமான வங்கி சேவைகளை அறிந்து கொள்ள அதிபர் தமது பாடசாலை சமூகத்திற்கு நல்ல வழிகாட் டியாக இருந்தார்.

பாடசாலை என்பது சமூகத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு நிறுவனம் .

எதிர்காலத் தலைவர்களை நல்லவிததில் உருவாக்கும் பொறுப்பு அதற்கு உண்டு. அந்த வகையில் திரு. ஸ்ரீகாந்தன் அவர்கள் மிகவும் நேர்மையுடனும் எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகக்கூடிய தன்மை கொண்டவர்.


அவர் இளைப்பாறினாலும் தொடர்ந்தும் தனது சேவையை சமூகத்திற்கு வழங்கவேண்டும் எனவும். மென்மேலும் சிறப்புற வாழ வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

முகாமையாளர்,
தேசியசேமிப்பு வங்கி, மானிப்பாய்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்.

எமது பாடசாலையில் கடந்த சில ஆண்டுகளாக கடமையாற்றி 02.10.2005 இல் ஓய்வுபெற்று 60 ஆவது அகவையைக் கொண்டாடும் அதிபர் திரு. அ.ஸ்ரீகாந்தன் அவர்கள் பாடசாலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பல வழிகளிலும் முன்னின்று உழைப்பதில் பல வெற்றி களைக் கண்டவர். ஆசிரியர் குழாத்துடன் மிக அன்னியோன்னியமாகப் பழகி அவர்களின் செயற்றிறனை ஊக்குவித்தவர். பாடசாலைச் சமூகத்துடன் இணைந்து பாடசாலையின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். அதிபர் அவர்கள் சகல செல்வங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றோம்.

பாடசாலை ஆசிரியர் கழகம்.



### அதிபர் திரு. அ. ஸ்ரீகாந்தனின் சேவை விவரம்

பெயர்: அருணாசலம் ஸ்ரீகாந்தன்
கல்வி கற்ற பாடசாலை :- யா / கொக்குவில் இ. கல்லூரி 1950–1965
ஆசிரியர் நியமனம் :- 25.06.1971
ஆசிரிய சேவை :- 25.06.1971 – 04.01.1991
அதிபர் நியமனம் :- 05.01.1991
அதிபர் சேவை :- 05.01.1991–02.10.2005
திருமணம் :- 18.01.1975
மனைவி :- திருமதி சர்வேஸ்வரி ஸ்ரீகாந்தன்
(ஓய்வு பெற்ற உப அதிபர், சண்டிலிப்பாய் இ. கல்லூரி)

## நிறைவான கடமையாளன்...

சம காலத்தில் என்னுடன் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்த திரு. அ. ஸ்ரீகாந்தன் அவர்களின் நேர்மையான போக்கு, உறுதியான செயற்பாடு, கடமை உணர்வு என்பவற்றால் என்னை மிகவும் கவர்ந்த அதிபராக விளங்கின்றார்.பாடசாலையில் அதிபராக இருந்த போது தன் சக ஆசிரியர்களினது நலனோன்பு விடயங்களில் மிகவும் அக்கறை கொண்ட வராகவும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தன் முழு நேரத்தையும் அர்ப்பணித்துக் கடமையாற்றி யவராகவும் விளங்கினார். பாடசாலைச் சமூகத்தோடு தொடர்ச்சியாகப் பேணிய நல்லுறவால் பாடசாலை நிர்வாகத்தை எவ்வித சிரமமுமின்றி நடத்தினார். சண்டிலிப்பாய்க் கோட்ட அதிபர் சங்கத் தலைவராகவும் இன்றுவரை சிறப்பாகக் கடமையாற்றினார். இவ்வருடத்தில் இவர் நடத்திய கல்விக் கண்காட்சி, கல்விப் பணிப்பாளரையும் ஏனைய அதிகாரிகளையும் மிகவும் கவரக்கூடியதாக இருந்தது. தனது நிறைவான கடமையினால் உயர்பதவி வகிக்கும் பிள்ளைகளைப் பேறாகப்பெற்ற இவர் இளைப்பாறிய காலத்திலும் கல்விக்கும், சமூகத்திற்கும் தன் சேவையைத் தொடர் ந்து வழங்குவார் என நம்புகிறோம். எல்லாம் வல்ல இறைவன் இவரையும் இவரது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக.

க. தனபாலசிங்கம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்.

## என் மனதில் பதிந்த பணியாளன்

ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக அதிபராக இருந்து தன்னலம் கருதாத சேவையாளனாக கடமையாற்றிய திரு. அ. ஸ்ரீகாந்தனை மனமாரப் பாராட்டி நிற்கின்றேன்.

கீர்த்தி மிக்கவராய் கொக்குவில் என்னும் கிராமத்தில் பிறந்து கல்வி பல கற்று, பதவிகள் பல ஏற்று இறுதியில் ஆனையூர் அடைக்கல அன்னையின் அரவணைப்பிலே இயங்கிவரும் இப் பாடசாலையில் அதிபர் பதவியை இவர் ஏற்றார். இவர் தொடக்கம் முதல் ஓய்வுபெறும் காலம்வரை தமது சேவையில் கண்ணும் கருத்துமாக திகழ்ந்தார். நற்பண்புகள் கொண்ட இவர் பிள்ளைகளின் மனதில் நற்பண்புகள் வளர்வதற்கு ஒரு முன் மாதிரியாகவும் திகழ்ந்தார். அது மட்டுமன்றி பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் மிகவும் அக்கறையும் கரிசனையும் உடையவராகவும் திகழ்ந்தார். பாடசாலை வளர்ச்சிக்காக தம் சேவைக் காலத்தில் அயராது உழைத்து இன்று ஓய்வு பெற்றுச் செல்லும் எம் அதிபரை நாம் இன்று பாராட்டி நிற்கின்றோம்.

இவரது ஓய்வுக் காலத்தில் இறைவன் இவரை ஆசீர்வதித்து பலப்படுத்தி நீண்ட காலம் உடல், உள சுகத்துடன் வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

வண.F.X.நேசராசா அடிகள்,
பங்குத்தந்தை, ஆனைக்கோட்டை.

## உள்ளத்தில் உயர்ந்தோன் பற்றி உவகையுடன் வாழ்த்தும்...

உயர்ந்த உருவத்துடன் நல் உள்ளத்திலும் உயர்ந்த என் அதிபர் திரு. அருணாசலம் ஸ்ரீகாந்தனின் சேவை நிறைவு நாளில், அவரது சேவையை மீட்டுப்பார்க்கின்றேன். பாடசாலை நேரத்தில் வெளிக்கடமைகளைத் தவிர்த்து முழுமையாகப் பாடசாலையை நிர்வகித்தவர். தனது பாடசாலையின் தேவைகள், அதன் வளர்ச்சிகள் பற்றித் திணைக்கள அதிகாரிகளை உயர்ந்த இடத்தில் வைத்தே அணுகி வெற்றிகண்டவர். ஆசிரியர்களை மிக மதித்து, புன்னகை மாறா முகத்துடன், ஆனால் மிக உச்சமாக அவர்களது சேவைகளைப்பெற்று, மாணவர் உயர்வுக்கு வழிகாட்டியவர். பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றுடன் நல்லுறவைப் பேணிப் பாடசாலையின் வளர்ச்சியை முன்னெடுத்துச் சென்றவர். அநீதிகளைக் கண்டு கொண்ட பொழுது ஆர்ப்பாட்ட மின்றி நீதியை அமைதியாகச் சந்தித்த பெருமகன், சண்டிலிப்பாய்க் கோட்டத்தின் வலிகாம வலயத்தின் நல்லதிபர், இனிய நண்பர், உயர்பண்பாளன், அடக்கமுடையோன், சலனமற்ற நல்லறிவாளன், இவரை, நான் ஓய்வுபெறுமுன் வாழ்த்தக்கிடைத்தமை பெருமையுடையது என எண்ணுகின்றேன். நல்லாசானுக்கு ஓய்வு என்பதில்லை. எனவே அவரது அகவை அறுபதில் தமிழுலகுக்குத் தொண்டாற்ற அழைத்து வலிகாம வலயத்தில் நான் சேவையாற்றிய காலத்தில் அவர் ஆற்றிய உயர் சேவைக்கு நன்றி கூறி நீண்ட ஆயுளுடன் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

திருமதி றெஜீனா இருதய நாதன்
வலயக் கல்வி பணிப்பாளர்,தென்மராட்சி

## செய்திறன் மிக்க பண்பான நம் அதிபர்

*"செருக்கிலா சீமான் திறமறிந்து செயல் கொள்வான்*
*மறந்தும் ஓர் சுடுசொல் சொல்லா பண்புடையான்"*

பதவியாலும், பணத்தாலும், குணத்தாலும், மூப்பாலும் உயர்ந்த நிலையில் இருப்பவர் ஆயினும் செருக்கில்லாமல் பண்பாக நடந்து கொள்பவராக விளங்குகின்றார். கடமையே கண்ணாக கொண்டவர். பாடசாலைக்கு முந்தி வந்து பிந்திப் போவார். உயர்ந்த நிலையில் நின்றாலும் அவரவர் தன்மைக்கு ஏற்ப தம்மை தாழ்த்தி, பணியமர்த்தப்பட்டோரை அவரவர் திறமறிந்து செயற்படவைப்பவர் எச்சந்தர்ப்பத்திலும் கடும் சொற்களைப் பாவிக்காமல் ஆசியர்களை வழிநடத்துவார். பாடசாலையில் எல்லோரிடமும் ஒரேமாதிரியாய் இருந்து ஒரு பக்கமும் சாயாமல் நடுநின்று நடந்துகொள்வார்.

S.R.வாமசிவன்
பிரதி அதிபர்.

## சிறந்த வழிகாட்டி

எமது பாடசாலை பல்வேறு வேதனைகளையும் சோதனைகளையும் சுமந்து கொண்டு பயணத்தைத் தொடர்ந்த போது கல்வித்திணைக்களத்தால் தேர்ந்து அனுப்பப்பட்ட அதிபர் திரு. அ.ஸ்ரீகாந்தான் ஆவார். அவரின் ஆளுமையும், அர்ப்பணிப்பும் பாடசாலை கோட்ட, வலய, மாகாண மட்டத்திலும் பேரும், புகழும் பெறுவதற்கு காரணமாக அமைந்துவிட்டது. இவ்வருடம் பாடசாலை ஒரு மிகப் பெரிய கண்காட்சியையும், அகில இலங்கைக் கல்விச் சுற்றுலாவையும், விவசாய, விஞ்ஞான, கல்விச் சுற்றுலாவையும், மனையியல் கண்காட்சியையும் கண்டு நிற்பதே இவற்றிற்கு சாட்சியாகும். இவ்வாறு எமது பாடசாலைக்கு சிறந்த வழிகாட்டியாக விளங்கியவர் அதிபர். அவருடைய இளைப்பாறுங் காலம் சிறப்பாக அமைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

பழைய மாணவர் சங்கமும்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கமும்.

# ஜீவநகரில் எழுச்சியுடன் நடந்த கேணல் சங்கரின் நினைவு நிகழ்வு

ஒட்டுசுட்டான்,ஒக்.3

அமுக்க வெடிக்கு இலக்காகி வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வான்படைத் தளபதி கேணல் சங்கரின் 4 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும் நினைவுத் தூபி திறப்பு விழாவும் கடந்த 26 ஆம் திகதி முத்தையன்கட்டு இடதுகரை ஜீவநகரில் நடைபெற்றன.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.இராசலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈகச்சுடரை கேணல் சங்கரின் மனைவி ஏற்றிவைத்து உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்தார்.

தமிழீழத் தேசியக்கொடியை தூயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஏற்றிவைத்ததைத் தொடர்ந்து நினைவுத் தூபியைத் தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே. பாலகுமாரன் திறந்து வைக்க பெயர்ப்பலகையை கேணல் சங்கரின் மனைவி திரைநீக்கம் செய்துவைத்தார்.

தொடர்ந்து நினைவுரைகளை முல்லைத்தீவு மாவட்ட ஊடகப் பேச்சாளர் சி.வேதவனம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சு.கனகரத்தினம், தூயவன் அரசறிவியற் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன் ஆகியோர் நிகழ்த்தினர்.

சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

(எ-341-203)

# முறிகண்டி ஆலயச் சூழலில் சுகாதாரச் சீர்கேடு இல்லை!

## ஆலய பரிபாலனசபை உறுதிப்படுத்துகிறது

திருமுருகண்டிப் பிள்ளையார் ஆலயச் சூழலில் கழிவுகள் முறைப்படி அகற்றப்பட்டு சுகாதாரம் பேணப்பட்டு வருவதாக முறிகண்டி ஆலய பரிபாலனசபை தெரிவித்திருக்கிறது.

முறிகண்டி ஆலயச் சூழலில் ஆலய பூசைப் பொருள்கள் உட்பட கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதியில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது என்று கடந்த மாதம் 26 ஆம் திகதி உதயனில் - வன்னிச் செய்திப் பக்கத்தில் - ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

அந்த செய்தி தொடர்பாக முறிகண்டி ஆலய பரிபாலனசபை இணைப்பாளர் ஒப்பமிட்டு விளக்கக் கடிதம் ஒன்றை உதயனுக்கு அனுப்பியிருக்கின்றார்.

ஆலயச் சூழலில் தினமும் முல்லைத்தீவு பிரதேச சபையினர் கழிவுகளை காலைவேளையில் அகற்றுகின்றனர். ஆலயபூசையில் தினமும் மூன்று இளநீர் தான் பயன்படுத்தப்படுகின்றன. அந்த வெற்றுக்கோம்பை ஆலயப் பகுதியில் இருக்கும் கழிவுத்தொட்டியில் போடப்பட்டு மறுநாளே அகற்றப்பட்டுவிடும். ஆலயத்திற்கு அருகில் மாவீரர் திலீபன் அவர்களின் சிலை இருக்கிறது. அவருடைய நிகழ்வு தினமும் காலையில் கொடி ஏற்றி நடைபெற்றுவந்தது. 24, 25,26 ஆகிய மூன்று நாளும் சுழற்சி முறை உண்ணாவிரத நிகழ்வு நடைபெற்று வந்ததால் கட்டாயமாக சுற்றாடல் பகுதி துப்புரவு செய்யப்பட்டுத்தான் இருந்தது - என்பதை உறுதிப்படுத்துவதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். (ஐ)

# சிறுவர் இல்லப் பணியாளர்களுக்கு பல்துறைசார் பயிற்சிப்பட்டறை

ஒட்டுசுட்டான்,ஒக்.3

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிர்வகிக்கப்பட்டுவரும் சிறுவர் பராமரிப்பு இல்லங்களைச் சே[illegible] இயக்குநர், பணியாளர்[illegible]னான ப[illegible]துறைசார் பயிற்சிப்பட்டறை [illegible]யில் [illegible] சிறுவர் இல்லக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

சிறுவர் இல்லங்களின் புனரமைப்பிற்கும் அபிவிருத்தித் திட்டத்திற்குமான பணிப்பாளர் இராசு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக தென்னாபிரிக்காவிலிருந்து வருகைதந்துள்ள திருமதி வள்ளி, கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி உதவியாளர் சுரேஷ்குமார், யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆதவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

புனித பூமி சிறுவர் இல்லம், பாரதி சிறுவர் இல்லம், இனியவாழ்வு சிறுவர் இல்லம், காந்தி சிறுவர் இல்லம், குருகுலம் சிறுவர் இல்லம் என ஐந்து சிறுவர் இல்லங்களைச் சேர்ந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட பயனாளிகள் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டனர்.

(எ-341-203)

# கண்டாவளை நெசவு நிலையத்தில் மீண்டும் கைத்தறிப் பயிற்சிகள்

பரந்தன்,ஒக்.3

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பலகாலமாக மூடப்பட்டிருந்த நெசவுக் கைத்தறி நிலையம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு கைத்தறி வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

தருமபுரம் கிராமத்தில் அமைந்துள்ள இந்த நிலையத்தில் கைத்தறி நெசவு புடவை உற்பத்தி நடைபெற்ற சமயம் பலர் வேலை வாய்ப்பைப் பெற்றிருந்தனர்.

அத்துடன் பெண்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வந்தன.

பின்னர் போர்ச்சூழல் காரணமாக இந்த நிலையம் இயங்காது இருந்ததுடன் கைத்தறிப் பொருள்களும் சேதமடைந்திருந்தன.

தற்போது மீண்டும் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டு நெசவுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 18 பயிற்சியாளர்கள் கைத்தறிப் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தற்போது நெசவுப்பயிற்சி நெறிகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்ற போதும் பயிற்சிகளை முழுமையாக வழங்குவதற்கு போதிய உபகரணங்கள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-352-203)

# முதியோர் இல்லத்தில் சிரமதானம்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சிப் பிரதேச சபையினரால் அண்மையில் வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த சிரமதானப் பணிகளில் கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட ஆயுள்வேத வைத்தியர்கள், உதவி வைத்தியர்கள், கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் ஐ.நா.அபிவிருத்தித் திட்ட முகாமையாளர், பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் உட்பட்ட பலர் கலந்து கொண்டனர்.

(எ-352-203)

## யு.என்.கபிடெக் நிறுவன உதவியுடன்

# கண்டாவளைக் கிராமங்களில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள்

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஆறு கிராமங்களில் யு.என்.கபிடெக் நிறுவனத்தின் நிதி உதவியுடன் அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஒரு கிராமத்திற்கு 20 லட்சம் ரூபாவீதம் செலவிடப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் உமையாள்புரம், பரந்தன், கோரக்கன்கட்டு, தருமபுரம் கிழக்கு, தருமபுரம் மேற்கு, புன்னைநீராவி ஆகிய ஆறு கிராமங்களில் விரைவில் அபிவிருத்தி வேலைகள் நடைபெறவுள்ளன என்றும்-

பொதுநோக்கு மண்டபம், சிறுவீதிகள், முன்பள்ளி, விளையாட்டு மைதானம், பொதுக் கிணறு போன்றன இத்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படவுள்ளன என்றும் கண்டாவளைப் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்தார். (எ-352-203)



போரூட் நிறுவன நிதியுதவியுடன் கரியாலை மக்கள் அபிவிருத்தி நிறுவனம் கரியாலை நாகபடுவானைச் சேர்ந்த 35 குடும்பங்களுக்கு மரக்கன்றுகளை வழங்கியது.

குடும்பத் தலைவி ஒருவரிடம் மரக்கன்றுகள் வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம். (எ-415)

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# பசுமைப் புரட்சி நிறுவன ஏற்பாட்டில் குமிழமுனையில் தையல் வகுப்பு

ஒட்டுசுட்டான்,ஒக்.3

வடக்கு-கிழக்கு மாகாணக் கைத்தொழில் அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கு-கிழக்கு பசுமை புரட்சிக்கான நிறுவனத்தினரால் (ஓ.ஜீ.ஆர்) நடத்தப்படவிருக்கும் 20 மகளிருக்கான தையல் பயிற்சியின் ஆரம்ப விழா கடந்த 23ஆம் திகதி குமுழமுனையில் நடைபெற்றது.

முல்லைத்தீவு பொருளாதார அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் தி.சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரை குமுழமுனை கிழக்கு கிராம அபிவிருத்தி அலுவலர் தெய்வேந்திரம் ஏற்றிவைக்கத் தேசியக் கொடியை குமுழமுனை வலயப் பொறுப்பாளர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து தமிழீழ பொருண்மிய முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் தயா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் திட்டமிடல் அலுவலர் தருமலிங்கம் ஆகியோர் கருத்துரைகள் நிகழ்த்தினர்.

இதனையடுத்துத் தையல் பயிற்சியை ஆசிரியை திருமதி மேரி இருதயநாதன் ஆரம்பித்து வைத்தார்.

(எ-341-203)

# பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் சிரமதானம்

புளியங்குளம்,ஒக்.3

தியாகி திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவன பிரதேச இணைப்பாளர்களின் ஒழுங்குபடுத்தலில் பல்வேறு இடங்களிலும் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புளியங்குளம் பிரதேசத்தில் ரகுபதி வீட்டுத் திட்டம், புளியங்குளம், முத்துமாரி நகர், பரசங்குளம் ஆகிய கிராமங்களிலும்-


கனகராயன்குளம் பிரதேசத்தில் கொல்லர் புளியங்குளம், கனகராயன்குளம் வடக்கு ஆகிய கிராமங்களிலும்-

சின்னடம்பன் பிரதேசத்தில் மதியாமடு, சின்னடம்பன் ஆகிய கிராமங்களிலும் -

நெடுங்கேணிப் பிரதேசத்தில் மாறாயிலுப்பை, நெடுங்கேணி தெற்கு ஆகிய கிராமங்களிலும் இந்தச் சிரமதானப் பணிகள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சிரமதானப் பணிகளில் மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-355-202)



தியாகி திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் முழங்காவில் காவல் பணிமனையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் தேசியக் கொடியை காவல் பணிமனைப் பொறுப்பாளர் ஏற்றுவதையும் -

காவல்துறை உறுப்பினர்கள் தியாகி திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்துவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:வெள்ளாங்குளம் செய்தியாளர்)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony கலர் T.V. 19'' விற்பனைக்குண்டு. விலை ரூபா 15,000 மட்டுமே. தொடர்பு: ஸ்ரீகுகன் விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு. T.P.: 0776146345, 021 4590746 (துளசி Net Com) (40632)

நல்ல நிலையிலுள்ள சோபா செற்றிகள், கங்கர்கள், சீலிங்பான், எலக்ரிக் மோட்டார்கள், தீராந்திகள், இறாக்கைகள் பனை மரங்கள் என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: த.குமாரசாமி, 352, நாவ்லர் வீதி, யாழ்ப்பாணம். (40709)

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட 250 Yamaha உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: N.பிரபு, சென்.செபஸ்ரியார் வீதி, கோண்டாவில் கிழக்கு,கோண்டாவில். T.P.: 0776570661 (40640)

ஐஸ் பழ கொம்பிரேசர் செற், வைக்கும் கிளினர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 077 6179090 (40624)

Toyata Toyace (Single Wheel) கன்ரர் வான் மற்றும் வெள்ளை நிக்ஷி தையல் மெசின் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: 35, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0776284313 (40641)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broilar குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 03.10.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும் சுட்டி பாம் - வட்டுக்கோட்டை, சன்னதி பாம் - தொண்டைமானாறு, ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம் சென்ரர் - இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (40294)

## காணி விற்பனைக்கு

கொழும்புத்துறை, ஆனந்தன்வடலி வீதி, 3ஆம் ஒழுங்கை, கொழும்புத்துறையில் 2 பரப்புகளைக் கொண்ட 2 துண்டுக் காணிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: சக்தி, இல.3, கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கு.T.P.No.: 0777474775, 0777 975176 (நேரில் தொடர்பு பகல் ஒரு மணி - 4 மணிவரை). E-mail: PRAKASAN 18@HOTMAIL.Com (40650)

பருத்தித்துறை, அத்தியடி, கல்லூரி வீதியும் வட இந்து மகளிர் கல்லூரி வீதியும் சந்திக்கும் இடத்திலிருந்து 100 யார் தூரத்தில் 3.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: T.P.: 63431 அல்லது 0112515950 (சி/45395)

## வீடு, காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொக்குவில், பொற்பதி பிரதான வீதியில் (தபால் பெட்டிச் சந்திக்கு அருகில்) 2¾ பரப்புக் காணியும் வீடும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.குணரத்தினம், பாடசாலை வீதி, ஆறுகால்மடம். (40726)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

பொமனேரியன் (வெள்ளை நிறம்) நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ம. தவராசா, நவாலி றோட், ஆனைக்கோட்டை (தரன்). (40728)

## வீடு வாடகைக்கு

அரியாலையில் கண்டி றோட்டில் சகல வசதிகளையும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 54, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம். T.P.:2691 (40729)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்ப, கனடா PR உள்ள, 30 வயது, சதயம், 20% கிரகபாவமுடைய மணமகனுக்கு உயர்கல்வி கற்ற, கணனி அறிவுள்ள, சிவந்த, அழகிய, பண்பான மணமகள் தேவை. மணமகன் தற்போது இலங்கையில் உள்ளார். விரைவில் கனடா செல்லவுள்ளார். தொடர்பு: விளம்பர இல. 2708, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (40647)

## தவறிவிட்டது

சி.மங்களேஸ்வரன் என்பவருடைய தே. அ.அட்டை (59093?856V), சாரதி அனுமதிப்பத்திரம், வாகன அனுமதிப் பத்திரம், வாகனக் காப்புறுதிப் பத்திரம் என்பன அடங்கிய பேஸ் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் சி.மங்களேஸ்வரன், ஆனைக்கோட்டை வீதி, குளப்பிட்டி அல்லது பேபி கூல்பார், குளப்பிட்டி என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். (40715)

---

## கௌரிக் காப்பு

கௌரிக்காப்பு முடிந்தபடி எம்மிடம் உள்ளது. தேவையானோர் தொடர்பு கொள்ளவும். ஒரு காப்பு 10/-.

**தா.வாசுதேவக் குருக்கள்**
உப்புமடம் சந்தி,
கோண்டாவில்.
(40599) (24-19)

---

**இன்று 03-10-2005 முதல் 01-11-2005 வரை**

**தீபாவளி மலிவு விற்பனை**
நீங்கள் வாங்கும் சகல பொருள்களுக்கும்
**விசேட கழிவு**
உடனே விஜயஞ்செய்யுங்கள்:

## லைடன் புடைவை நிலையம்

இல. 410, ஆஸ்பத்திரி வீதி
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.
☎ 222 2381 (சி/45379) (24-19)

---

## 30ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**இராசரத்தினம் சுந்தரலிங்கம்**

| தாய் மண்ணில் | இறையடி |
| --- | --- |
| 1948-08-16 | 1975-10-03 |

முப்பது ஆண்டுகள் சென்றாலும்
முடியாமல் தொடருகின்ற உங்கள் நினைவுகளுடன்
வேகின்ற நெஞ்சங்களாக என்றுமே வாழ்கிறோம்
உங்கள் கனவுகளை நினைவாக்க திடமாக
என்றென்றும் வாழ்ந்திடுவோம் அப்பா...

ஆத்மா சாந்திபெற கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்,
அன்பு மனைவி - சுந்தரலிங்கம் சிவமணி,
அன்பு மகன் - சுந்தரலிங்கம் பகீரதன்,
மற்றும் ஏனைய குடும்பத்தினர்கள்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை. (40635) (24-19)

---

## நெஞ்சம் மறவாத 30 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 . 08 . 1917
உதிர்வு 03 . 10 . 1975



**திருமதி மேரி கிருபையம்மா இராஜக்கோன்**

தன்னை யுருக்கி ஒளிதந்து,
தரணியில் எம்மை ஆளாக்கி,
முன்னை நீர் செய்த தியாகங்கள்,
அன்னையே நெஞ்சை விட்டுப் போவதில்லை.
முத்து ஈன்ற சிப்பியாய்
முழுமதி நீர் உமையுருக்கி
பற்று வைத்தே எமை வளர்த்தீர்
பாரில் உள்ளவரை நாம் மறவோம்.

அன்புப் பிள்ளைகள்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை. (40326)(51-11-17)

32, றக்காலேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

---

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**அரியகுணராசா கார்த்திகா**

| அன்னை மடியில் | இறைவன் அடியில் |
| --- | --- |
| 16.08.1981 | 03.10.2003 |

ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
ஓயவில்லை உம் நினைவு
நித்தம் நித்தம் எம் நெஞ்சில்
நிழலாய் நிற்கிறாய்
உன் மலர்ந்த முகமும், புன் சிரிப்பும்
எம் நெஞ்சைவிட்டு அகலாது
வாடிவிட்டமலர் போல் போய் விட்டாய் நீண்டதூரம்
போனதூரம் நாமறியாமல் உன் நினைவில்
ஏங்கித் தவிக்கின்றோம்.

ஓராங்கட்டை,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.


- குடும்பத்தினர்.

(40644)(51-45-13)

---

# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சின்னத்துரை



வரணி, இயற்றாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சின்னத்துரை அவர்கள் (01-10-2005) சனிக்கிழமை ஜேர்மனியில் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்தம்பி (அமரர்) - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் நாகேஸ்வரியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் கருணாகரன் (லண்டன்) பத்மகலா (லண்டன்), யசோகரன் (லண்டன்), யசோகலா, பத்மஜோதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு அப்பாவும் கந்தர் (அமரர்) - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும் கணபதிப்பிள்ளை, கந்தசாமி, காலஞ்சென்ற செல்லம்மா, வள்ளிநாயகி, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கராசா (லண்டன்), நாகதீபன், பாஸ்கரன் (சுவிஸ்), சுகிர்தா, சுஜிகரன் (ஆஸ்திரேலியா), சுதர்சன் ஆகியோரின் மாமனாரும் சிவசிதம்பரம் (அமரர்), சிவானந்தம் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும் பரமசிவன் (இத்தாலி), புஸ்பராணி, பரமேஸ்வரி,உதயகுமார், ஆனந்தகுமார் (ஜேர்மன்), சிவகுமார், சந்திரகுமார் (லண்டன்), சாந்தகுமாரி (சுவிஸ்), இராஜகுமாரி ஆகியோரின் சித்தப்பாவும் றஜீதன் (லண்டன்), றஜீதா, டனுஜா ஆகியோரின் பெரியப்பாவும் அகிஸின் (லண்டன்) பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (08.10.2005) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

வரணி இயற்றாலை,
வரணி. (40717) (24-19)

தகவல்:
**மார்க்கண்டு (சகோதரன்).**

பட்டமளிப்பு விழா - 2005

ஒப்பனைகள்

Make-up, Facials, Eyebrow Shapping

மேற்படி சேவைகள் குறைந்த கட்டணத்துடன் குறித்த நேரத்திற்குள் மேற்கொள்ளப்படும்.

T.P. No: 0779143171

தூரிகை

M.M.V. வீதி, நெல்லியடி. (40730)(51-) செங்குந்தா வீதி, கல்வியங்காடு.



**A/L DAY CLASS**

B.st. -Mr. பசில்
Acc.- Mr. தவா
Ec.- Mr. கஜீதரன்

**A/L 2007/2006**

Tam. -Mr. சிவா
Log.- Mr. கமல்
Chr.- Mrs. A. மல்லிகா
H.e.-Mr. ஜெயக்குமார்

Geo, Eng.
SHAMROCK
J/EACHCH
AMODDAI

(40734)


## தவறிவிட்டது

பனசொனிக் கமரா போன் (077 66 23655) என்ற சிம்மை உடையது. கண்டி வீதி, யாழ். செயலக சூழலில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள்

**0776327618**

என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (40721)

## தேவை

யாழ். மாவட்டத்திலும் அதன் ஏனைய சுற்றுப்புறங்களிலும் பொருள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக வேலை செய்யக் கூடிய விவசாயக் கற்கைநெறியில் பட்டதாரி (**Product Development Officer**) தரத்தில் உள்ள பெண்கள் தேவை.

ஆங்கில அறிவு அனுகூலமாகும்.
மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
வயது:- 25 தொடக்கம் 35 வரை.
சம்பளம்:- பேசித்தீர்க்கலாம்.

**வெளிக்கள உதவியாளர்:-** பெண் விவசாயக் கற்கை நெறியில் டிப்ளோமா பட்டம் பெற்றிருக்க வேண்டும்.
வயது:- 20 தொடக்கம் 30 வரை.

10 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இலக்கம் 2706,**
**மே/பா. உதயன் பணிமனை, யாழ்ப்பாணம்.**

(4050 1) (30-12-18)

## 01.10.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 300606316 இலிருந்து 300624051 வரை

சீட்டிழுப்பு இல. 1646

வெற்றி எண்கள்

**06 26 62 69**

சுப்பர் எண் **11**

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.37,69,100/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 37,69,100/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 30 | 5,000/- | 1,50,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 482 | 1,000/- | 4,82,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,555 | 500/- | 7,77,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 22,735 | 40/- | 9,09,400/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 21,747 | 20/- | 4,34,940/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,24,613 | 10/- | 32,46,130/- |
| | | மொத்தம் | 79,99,970/- |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், சைக்கிள் | 5 | 1,00,000/- | 5,00,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 84,99,970/- |

**இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: 46,36,700/-**

தொடர் இல. 200655044 க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 05 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகைகள், தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் அடங்கிய பரிசு முறிவை வென்றெடுத்த 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| திருகோணமலை | 300606700-4-12 |
| புத்தளம் | 300622051-7-42 |
| மாத்தளை | 300612027-3-95 |
| மொனராகலை | 300607441-6-31 |
| கொழும்பு | 300613814-8-37 |

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

## மரண அறிவித்தல்

### திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்துரை

கைதடி, வடக்கைப் பிறப்பிடமாகவும் 393/18, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளிப்பிள்ளை சின்னத்துரை நேற்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனையாளும் காலஞ்சென்றவர்களான தவமணிதேவி (தாதி உத்தியோகத்தர்), நித்தியானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி க.சுந்தரலிங்கம் (அதிபர் யா/இருபாலை சீ.சீ.த. கலவன் பாடசாலை) அவர்களின் பெறாமகளும் க.சுந்தரலிங்கம் (ரூலின்ஸ் கட்டட நிறுவனம்) அவர்களின் அன்பு மாமியும் ரூபினி (தரம்-8, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அமலன் (தரம் -2 யா/ இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*393/18, கோயில் வீதி,*
*நல்லூர் வடக்கு, நல்லூர்.*
(40748) (30-12-18)

தகவல்:
திருமதி. க.சுந்தரலிங்கம்
(அதிபர் யா/இருபாலை சீ.சீ.த.கலவன் பாடசாலை, கோப்பாய்).


## பொருளியற் கல்லூரி

*நாவலர் றோட் -யாழ்ப்பாணம்*

**பிரிவு 11 A/L DAY CLASS**

- கலைப்பிரிவு

**தமிழ்-மீரா**
திங்கள், செவ்வாய், புதன், வெள்ளி 7 - 8
ஆரம்பம்: 05.10.2005 புதன்

**புவியியல் - குமரன்**
திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி 8 - 9
ஆரம்பம்: 03.10.2005 - திங்கள்
ஏனைய பாடங்களும் நடைபெறுகின்றன.

**A/L DAY வர்த்தகப் பிரிவு**
**புதியபிரிவு**
திங்கள், செவ்வாய் , வியாழன், வெள்ளி
8-12.30 வரை நடைபெறுகின்றன
புதிய அனுமதிகளை இன்று தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம். (40734)


## விற்பனையாகின்றது

முதிரை 4X3 சைஸ் 3 அடி முதல் 10 அடி வரை முதிரைப் பலகை 4'' முதல் 20'' வரை மவுக்கினி 4 X 3 சைஸ் 3 அடி முதல் 10 அடி வரை மவுக்கினிப் பலகை 4 இஞ்சி முதல் 12 இஞ்சி வரை மற்றும் 4X2 சிரான்டீஸ் 2X2 நீப்பயர், 2X1 நீப்பயர் வகைகளும் தரமான மலிவான விலைகளில் விற்பனைக்குண்டு.

*அம்மன் வீதி, திருநெல்வேலி கிழக்கு,*
*தலங்காவல் பிள்ளையார் கோயிலடி.*
(அண்ணி அன்பளிப்பு மாளிகைக்கு அருகில்)
T.P.: 021 222 3729
(40733)

## நெஞ்சம் மறவாத நினைவுகளுடன் மூன்றாண்டு



திருமதி

### நகுலேஸ்வரி குலசிங்கம்

**(லீலா)**

**திதி: அமாவாசை (03-10-2005)**

**பெற்று வளர்த்துப் பிரியமுடன்**
**அமுதூட்டிய தெய்வமே!**
**பேதலித்து வாழ்கின்றோம்**
**உன்னைப் பிரிந்ததனால்**
**பற்றைவிடுத்து பரலோகம்**
**புகுந்த தெய்வமே!**
**பரமனடியில் சேர்ந்து**
**வாழவேண்டுகின்றோம்.**

*மூன்றாண்டு நினைவுகளுடன்,*
**குடும்பத்தினர்.**

புலவனார் வீதி,
கல்வியங்காடு.
T.P.: 222 7671
(40731) (24-30-12-18)


**மனோகரா** யாழ்ப்பாணம்

இளைய தமிழன் ஸ்ரீகாந் நடித்த

**ஒருநாள் ஒருகனவு**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30.

(அ-44110)

**நாகம்ஸ்** சினிமா சுன்னாகம்

*இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு*

ஜெயம் ரவி, கலாபவன்மணி, வடிவேல் நடித்த

**மழை** (சிங்கல்)

காட்சிநேரம்:- பு.நே. 11.00, 3.00, 7.00, 9.30.

**ராஜா** யாழ்ப்பாணம்

*இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு*

*சூர்யா, அசின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த*

**கஜினி**

காட்சிநேரம்:- பு.நே. 10.30, 2.30 6.30, 9.30,

*(ரிக்கற் முற்பதிவு செய்துகொள்ளலாம்)*

**நாதன்ஸ் சினிமா** குளிரூட்டப்பட்டது. ஆஸ்பத்திரி முன்பாக, யாழ்ப்பாணம்.

சரத்குமார், வைகைப்புயல்
வடிவேலு, நமீதா நடித்த

**சாணக்யா**

காட்சிநேரம்:- பு.நே. 2.30 6.30, 9.30.

(அ 43383)


## VACANCY

DEZA
DDC
DSC
SDC
COSUDE

**1. POST OF CIVIL ENGINEER (01 Position)**

- Should possess B.Sc. degree in Civil Engineering
- Good communication and interpretational skill & Knowledge in Ms Office, and also Knowledge in M-project & Autocad would be considered as an added advantage
- High level proficiency in written and spoken English
- Ability to function effectively in **a team environment**
- Preferably one with not less than five years experience in building Construction.

Duty station - Jaffna.

Duration- Initial appointment will be for one year with a possibility of extension.

Remuneration - Negotiable.

Please send the letter of application with a complete CV to SDC **Field Office, 521/11, PointPedro Road, Nallur, Jaffna on or before** the 10th of October 2005.

(40907)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் கந்தசாமி (ஆனந்தன்)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கந்தசாமி அவர்கள் 29.09.2005 அன்று இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் தலைமகனும் காலஞ்சென்ற தியாகராசா (பேபி), சறோஜினிதேவி (கனடா), தங்கராசா (வபி - கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தேவராஜா (கனடா), ஜெயராணி (கனடா)ஆகியோரின் மைத்துனரும் சுபோதினி (கனடா), துஷ்யந்தினி (கனடா) ஆகியோரின் மாமனாரும் தயாளினி (கனடா), பிரதீபன் (கனடா), பிரதாபன் (கனடா), தனஞ்சயன் (கனடா) ஆகியோரின் பெரிய தகப்பனாரும் யஸ்மிகா (கனடா), தானியா (கனடா) ஆகியோரின் பாட்டனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2005) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் விளாவெளி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அரசடி வீதி,*
*வடலியடைப்பு.*
(40737) (24-30-12-18)

தகவல்:
திரு.திருமதி தேவராஜா, திரு.தங்கராஜா (வபி).

### நாகலிங்கம் குகராஜா



*(ஓய்வுபெற்ற பொறியியலாளர், தலைவர்- இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வலி. மேற்குப் பிரிவு)*

அராலி மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகலிங்கம் குகராசா நேற்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் சதாசிவம் - தங்கமுத்து தம்பதியரின் அருமை மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும் பார்த்தீபன் (லண்டன்), வாசுகி, நாகலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மாலினியின் (லண்டன்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.10.2005) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூணாவடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*அராலி மத்தி,*
*வட்டுக்கோட்டை.*
(40741) (30-12-18)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகள்.

### சின்னசாமி செல்லமுத்து (கந்தையா)


சின்னசாமி செல்லமுத்து நேற்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*128, பலாலி வீதி,*
*திருநெல்வேலி தெற்கு,*
*யாழ்ப்பாணம்.* (40740) (30-12-18)

தகவல்:
திருமதி பா.ஞானலோசினி.

### சம்பந்தர் இராசையா



*(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் J/61)*

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சம்பந்தர் இராசையா நேற்று (02.10.2005) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சம்பந்தர் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் சரஸ்வதி தம்பதியினரின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் இராசசுலோசனா, இந்திராணி (சுவிஸ்), இலங்கேஸ்வரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகேஸ்வரன், சிவபாலநாதன் (சுவிஸ்), அமிர்தா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர் மற்றும் கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் அன்னம்மா, இராசம்மா, சண்முகநாதன், மங்கயற்கரசி ஆகியோரின் மைத்துனரும் சுபோதினி (H.N.B.A.), கோபிகிருஷ்ணா, கீர்த்திகா, சாருஜன், இந்துசன், இந்துஜீ, இந்துஜிகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.10.2005) திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 24, 4ஆம் குறுக்குத்தெரு,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.* (40747) (30-12-18)

தகவல்:
குடும்பத்தினர்.

# மாத நடுப்பகுதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூகத் தலைவர்களும் இந்த விடயம் குறித்து சுமார் மூன்று மணி நேரம் ஆராய்ந்தனர்.

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், க.துரை ரட்ணசிங்கம், மாகாணக் கல்வி அமைச்சின் விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் எஸ். குணரட்னம், மாவட்ட வர்த்தகர் சங்கத் தலைவர் துரைராசா, இந்து மதக் குருமார்களான சோ.ரவிச்சந்திரக் குருக்கள், சிவசிறி குமார விக்னேஸ்வரக் குருக்கள், சட்டத்தரணி கா. சிவபாலன், மாதர் சங்கத் தலைவி கண்மணி இரத்தினவடிவேல், தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் த.விக்னேஸ்வரன், முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தங்கராசா ஆகியோர் உட்பட சுமார் நூறுக்கும் மேற் பட்டவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் உரையாற்றிய சம்பந்தன் எம்.பி. தெரிவித்ததாவது:-

சிங்களத் தலைமைகள் ஒருபோதும் தமிழர்களின் உரிமைகளைத் தரப்போவதில்லை. நாமேதான் அவற்றைப் பெறவேண்டும். தற்போதைய அரசமைப்பு இந்த நாட்டில் நடைமுறையில் இருக்கும் வரை தமிழ் மக்களுக்கு விமோசனம் இல்லை. எந்தத் தீர்வும் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை.

சிங்களத் தலைமைகளுக்கு தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற எந்த அக்கறையும் இல்லை. தீர்வுக்கான பல்வேறு சந்தர்ப்பங்கள் இருந்தும் அவற்றை அவர்கள் பயன்படுத்த வில்லை. இதற்குக் காரணம், பக்குவமாகவும் நீதியாவும் சிந்திக்கக் கூடிய தலைமை ஒன்று தெற்கில் இல்லாமைதான். ஒருபோதும் அத்தகைய தலைமை இருந்ததில்லை.

சிங்களவர்கள் ஒருபோதும் தமிழ் பேசும் மக்களுக்கான உரிமையைத் தாமாகத் தரப்போவதில்லை. அவற்றை நாமே வென்றெடுக்க வேண்டும். அதற்கான பணியில் தமிழர்களுடன் முஸ்லிம்களும் இணைந்து கொள்ள வேண்டும். - என்றார். (க)

# திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துறைமுகப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்கள் வசமிருந்த வீடியோக் கமராவை பொலீஸார் ஆராய்ந்து பார்த்தபோது அதில் திருகோணமலைத் துறைமுகம் தொடர்பான பதிவு ஏதும் இருக்கவில்லை என்றும்-

எனினும், பொலீஸாரின் விசாரணை தொடர்கிறது என்றும்- வேறு சில செய்திகள் தெரிவித்தன. (க)

# பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவுசெய்வார் எனப் பிரதமர் அவர்களிடம் உறுதியளித்துள்ளார் எனக் கூறப்படுகிறது. இந்நிலையில், "யாருக்கு ஆதரவளிப்பது என்பதை அவர்களே தீர்மானிக்கவேண்டும். அது அவர்களுடைய சுதந்திரம். எவரையும் கட்டாயப்படுத்தி ஆதரவைப் பெற முடியாது என்பதை நான் ஏற்றுக்கொள்வேன். ஆனால், ஜனாதிபதியை யும், எதிர்க்கட்சித் தலைவரையும் ஏமாற்றியது போல் என்னை ஏமாற்ற முடியாது. ஆரம்பத் தில் எனக்கு எதிராக செயற்பட்டுவிட்டு நான் வெற்றி பெற்ற பின் என்னுடன் ஒட்டிக்கொண்டு பதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று நினைப்பது நடக்காத ஒன்று. இப்பொழுது முதல் எனக்காக உழைப்பவர்களைக் கடைசி வரை கைவிடமாட்டேன்"- என்றும் கூறியுள்ளார் பிரதமர். அவரது செய்தி இரு சிறுபான்மைக் கட்சித் தலைவர்களுக்கும் எடுத்துக் கூறப்பட்டுள்ளதாம்.

அண்மையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் மேற்குறிப்பிட்ட இரு கட்சிகளுடன் நடத்திய பேச்சுகளின் நிலை என்ன என்று பிரதமரிடம் கேட்டபோது பிரதமர் இந்த விடயங்களைக் கூறியுள்ளார் என்று தெரிகிறது. (க)

# நாட்டின் பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு, நாடாளுமன்ற நிர்வாகப் பிரிவு ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் கணிசமான அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கான ஒதுக்கீடு இவ்வருடத்தின் 2 ஆயிரத்து 605 கோடி ரூபாவிலிருந்து 3 ஆயிரத்து 401 கோடி ரூபாவாக அடுத்த ஆண்டுக்கு உயர்த்தப்பட்டுள்ளது.

இதேவேளை, போக்குவரத்து அமைச்சுக்கான ஒதுக்கீடு இவ்வாண்டின் ஆயிரத்து 333 கோடி ரூபாவிலிருந்து 779 கோடி ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த அமைச்சிலிருந்து இவ்வருடம் பிரித்துத் தனியாக்கப்பட்ட ரயில்வே அமைச்சுக்கு அடுத்த ஆண்டுக்கு ஆயிரத்து 290 கோடி ரூபா புதிதாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று இவ்வாண்டின் 9 ஆயிரத்து 525 கோடி ரூபா ஒதுக்கீடு பெற்ற நிதி திட்டமிடல் அமைச்சுக்கு அடுத்த ஆண்டில் ஆக 5 ஆயிரத்து 279 கோடி ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் 832 கோடி ரூபா ஒதுக்கீட்டைப்பெற்ற நிவாரணம், புனர்வாழ்வு, நல்லிணக்க அமைச்சு அடுத்த ஆண்டில் ஆயிரத்து 251 கோடி ரூபாவைப் பெறுகின்றது. கடந்த ஆண்டில் ஆக 27 கோடி 70 லட்சம் ரூபா பெற்ற புத்தசாசன அமைச்சு அடுத்த ஆண்டில் 49 கோடி ரூபாவைப் பெற்றுக் கொள்ளவிருக்கின்றது. (க)

# ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரி - உறைக்கும் விதத்தில் - பிரதமர் மஹிந்த பக்கத்திலிருந்து சூடான பதில் இ.தொ.கா. தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதையடுத்தே, வேறு வழியின்றி ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் கட்டாயத்துக்கு இ.தொ.கா. தள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஆளும் கட்சியின் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவுக்கு மாறாக ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை இ.தொ.கா. அறிவிக்கும்போது, ஆளுந்தரப்பிலிருந்து இ.தொ.கா. வெளியேறுவதுடன் அக்கட்சியின் சார்பில் அமைச்சர், பிரதியமைச்சர் பதவிகளில் இருப்போரும் பதவிவிலக வேண்டிவரும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. (க)

# ஹெல்பிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கால உத்தரவு ஒன்றை வழங்கியிருக்கின்றது என்பதும்- தெரிந்தவையே.

குற்றப் புலனாய்வுப் பொலீஸாரிடம் ஐ.தே.கட்சியின் கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் காசிம் முன்னர் செய்த முறைப்பாட்டின்பேரிலேயே அந்த விசாரணைகளை குற்றப் புலனாய்வுத் துறையினர் ஆரம்பித்திருந்தனர்.

ஆனால், ஆழிப்பேரலையால் நேரடியாகப் பாதிக்கப்படாத - அந்தப் பாதிப்புக்கான நிவாரணத்தைப் பெறுவதற்குத் தகுதியற்ற - கேகாலை மாவட்ட எம்.பி. ஒருவரின் முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அந்த நிவாரணப் பணியில் ஊழல் நடந்ததா என்பது குறித்து விசாரிப்பது பொருத்தமற்றது என்ற சாரப்பட உயர்நீதிமன்றம் அந்த இடைக்காலத் தடைவிதிக்கும்போது குறிப்பிட்டிருந்தது.

அத்தோடு இந்த ஊழல் குற்றச்சாட்டுக்கான முறைப்பாடு வெறும் பத்திரிகைச் செய்தியின் அடிப்படையிலே செய்யப்பட்டுள்ளது. அதை ஓர் ஆதாரமாக வைத்து இத்தகைய விசாரணை ஒன்றை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆரம்பிக்கலாமா என்றும் நீதியரசர்கள் அப்போது கேள்வி எழுப்பியிருந்தனர்.

அந்தக் காரணங்களுக்காகவே ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களைக் கொண்டு தகுந்த சான்று மற்றும் ஆதாரங்களோடு இந்த ஊழல் விவகாரம் குறித்து உரிய முறையில் முறைப்பாடு செய்ய முடிவு எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (க)

# மேல்கொத்மலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலவாக்கலை பஸ் நிலையத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் புதிய இடதுசாரி முன்னணியின் தேசிய அமைப்பாளர் இ.தம்பையா மட்டுமே அரசியல்வாதி என்ற வகையில் கலந்து கொண்டார்.

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் உட்பட மேலும் சில தொண்டர் அமைப்புகளையும் சேர்ந்த சுமார் நூறு பேர் மட்டுமே இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நேற்றுக்காலை பஸ் நிலையத்தின்முன் பதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். பெருமளவு கூட்டத்தை எதிர்பார்த்து பொலீஸ் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரான தலவாக்கலைப் பகுதி நகரசபைத் தலைவர் ஒருவரும் மற்றும் ஒரு நகரசபையின் முஸ்லிம் பிரதிநிதி ஒருவரும் உட்பட ஒரு பெரிய கூட்டம் கோஷங்களை எழுப்பிக் கொண்டு அங்கு வந்தது.

கூட்டத்தில் வந்த குண்டர்கள் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பினர். அத்திட்டத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் மீது இக்குண்டர்கள் திடீரெனத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மத்தியில் இருந்த - பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த - ஊடகவியலாளர் ஒருவர் குண்டர்களினால் கடுமையாகத் தாக்கப்பட்டார். அவரது புகைப்படக் கருவியும் சேதமாக்கப்பட்டது.

பெருமளவு பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும் பொலீஸார் இத்தாக்குதலைக் கண்டும் காணாதது போல் இருந்தனர்.

கூட்டம் கலைந்தபின் தாக்குதலுக்கு ஆளான ஊடகவியலாளரை பொலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்ற பொலீஸார், அவரது முறைப்பாட்டைப் பதிவு செய்தபின் அவரை அனுப்பிவிட்டனர். இது வரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிராக தொடர்ச்சியாகப் பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டு வந்துள்ளன. இப்போராட்டங்களை எப்படியாவது முறியடிக்க வேண்டும் எனத் திட்டமிட்ட தீய சக்திகள், இத்தகைய ஆர்ப்பாட்டங்கள்பெரும்பான்மை இனத்தவர்களுக்கு எதிரான போராட்டங்களே என உருவகப் படுத்தியே இந்தத் தாக்குதலைத் தூண்டிவிட்டுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது. (க)

# மஹிந்தவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மேல் நீடித்தது. பேரினவாதக் காடையர்கள் ஆர்ப்பாட்டத்தைக் குழப்பினர். சிலர் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். அக்காடையர்கள் மதுபோதையில் இருந்தனர். அவர்களிடம் ஆயுதங்களும் இருந்தன. அவர்கள் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவின் பிரசாரக் காரியாலயத்திலிருந்தே வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்களுடன் தலவாக்கலை - லிந்துல நகரசபைத் தலைவர் நிமலசேனவும் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அவ்விடத்திலிருந்த பொலீஸார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காது அமைதி காத்தனர். ஆர்ப்பாட்டக்காரர்களிடமிருந்து நிதி சேகரிப்பு உண்டியல்களையும் அக்காடையர்கள் பறித்துக்கொண்டனர்.

ஜனநாயக ரீதியான போராட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் குழப்பத்தையும் மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது. ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்து செயற்படுபவர்கள் இந்நடவடிக்கையைக் கண்டிப்பதுடன் உரிய நடவடிக்கையையும் எடுக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறான - கோழைத்தனமான - நடவடிக்கைகளால் எமது போராட்டத்தை நாம் ஒருபோதும் கைவிடப் போவதில்லை. காடையர்களுக்காக நாசகார திட்டத்தை ஆதரிக்கமுடியாது. அத்திட்டம் நிறுத்தப்படும் வரை தொடர்ந்து போராடுவோம்.- என்று உள்ளது. (க)


**CHEMISTRY**

அலகு ரீதியான, மாதிரி வினா விடை

DIAS BSc. (Hons) Spl. Chem.

BRIGHTMAN - நாவலர் வீதி.

SAT., SUN. - 12 p.m. (39962)(30-12-18)

**SUNSHINE EXAM**

"Make Hay While The Sunshine"

- A/L கணித விஞ்ஞான மாணவர்களிற்குரியது.
- NEW SCIENCE CENTRE இல் ஏதாவது ஒரு பாடம் கற்றல் வேண்டும்.
- வினாத்தாள் திருத்தித்தரப்படும்.
- விடைக்குறிப்பு வழங்கப்படும்.
- மாவட்டத் தரப்படுத்தல் இடம்பெறும்.
- பரீட்சை நிலையங்கள் வடமராட்சி, சாவகச்சேரி, யாழ். நகர் என்பவற்றில் அமையும்.

முதல்பரீட்சை புதன் (05.10.2005)

பிரிவு I - 1 - 3 p.m.

(40733)(30-12-18) பிரிவு II - 3 - 5 p.m.

இப்பொழுது உங்கள் புத்தக நிலையங்களில்

**Information Technology 2005/2006**

ஜெ.பிரதீபன் B.Sc.(Hons)

LECTURER IN INFORMATION TECHNOLOGY

SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNICAL EDUCATION

1. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம்
2. Sri Lanka Book Depot - யாழ்ப்பாணம்
3. Book Lab - பரமேஸ்வரா சந்தி
4. கனகா - திருநெல்வேலி சந்தி
5. பாக்கியா - கொக்குவில் இந்து முன்பாக
6. CB Computer Accadamy - கோண்டாவில்
7. Luxmy புத்தகசாலை - நெல்லியடி

**CHEMISTRY DAY CLASS**

By: அன்பழகன் B.Sc.

பிரிவு I திங்கள் முதல் வெள்ளிவரை 10-11.30

மாணவர்களின் நலன் கருதி -

ORGANIC பிரிவு II ▶ Mon.,Fri.12 - 1

INORGANIC பிரிவு III ▶ Sat.,Sun.12 - 1

SEMINAR ▶ Tue.10 - 2

வெப்ப இரசாயனம் ▶ Sat.,Sun.10 - 11

அயன் சமநிலை ▶ Sat.,Sun.11 - 12

யாவும் ஒரேயொரு கட்டணத்துடன்

Note:- பிரிவு I இன் அனுமதி 11.10.2005 உடன் நிறுத்தப்படுகிறது. பிரிவு II இல் அனுமதிக்கப்படுபவர்கள் இடநெருக்கடி காரணமாக Seminar இற்கு அனுமதிக்கப் படமாட்டார்கள்.

NEW SCIENCE CENTRE யாழ். நகர்.

(7025)(30-12-18)

**பட்டமளிப்பு விழா வாழ்த்துக்கள்**

யாழ். பல்கலைக்கழக பட்டம் பெறும் மாணவர்களின் புகழ் உலகமெல்லாம் பரவ...

உதயன் இணையப் பதிப்பில் வாழ்த்துவோர் வாழ்த்தலாம்.

WWW.uthayan.com

தொடர்புகளுக்கு: உதயன் விளம்பரப் பிரிவு - 0212223837

(c-45401)(30-12-18)

**அபிவிருத்தி அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 718 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 30-9-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 5723994-5740554 |

வெற்றி இலக்கங்கள் 22 26 27 44

லக்கினம் கன்னி

ஜக்பொட் பரிசு ரூபா. 10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த செவ்வாய்க்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,67,497 | 10/- | 36,74,970/- |
| 2.இலக்கங்கள் | 33,792 | 20/- | 6,75,840/- |
| 1.இல லக்கினம் | 33,486 | 30/- | 10,04,580/- |
| 2.இல லக்கினம் | 3,034 | 100/- | 3,03,400/- |
| 3.இலக்கங்கள் | 890 | 500/- | 4,45,000/- |
| 3.இல லக்கினம் | 79 | 5,000/- | 3,95,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| | | மொத்தம் | 7,798,790/- |
| முச்சக்கர வண்டி | 5 | 2,10,450/- | 10,52,250/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 8,851,040/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 8,851,040/- தொடர் இல. 4788818 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2005 ஒக்டோபர் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 5733988-0-77 |
| புத்தளம் | 5732605-9-17 |
| கொழும்பு | 5735677-4-10 |
| கம்பஹா | 5734288-9-07 |
| மாத்தளை | 5734937-3-81 |


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.